★ முதலாளித்துவ மூலவருக்கு மகஜர்! ★

Phone No. 4302 | விலை அணா ஒன்று | Regd. No. M. 5458 | இலங்கை 10 சதம்

[stamp] ... T.V.I. ... சென்னை 19.

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (3—11—49) வெளியீடு (4—11—49) | இதழ் 81

தொழிலாளர்கள் தியாகம் செய்யவேண்டுமாம்!

பணமூட்டைகளுக்கும் கவலை இருக்கிறதாம் கஷ்டமிருக்கிறதாம்?

பதவி யேற்க ஆள் கிடைத்தால் பதவியைத் துறக்கத் தயாராம்!

பிறந்த விழாவிலே பட்டேலின் பரவசப் பேச்சு!

"பணக்காரர்களுக்கும் தங்களுக்கு ஏற்ப சில சிரமங்கள் இருக்கின்றன. நமது தேசத்தில் பணக்காரர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. அவர்களை ஹிம்சைப்படுத்தினால் நமக்கு லாபம் ஏற்பட்டுவிடாது."

"பணக்காரர்களிடமிருந்து எவ்வளவு உதவி பெற முடியுமோ அதைப் பெறுவோம். அவர்களுக்கு வேண்டுகோள் விடுப்போம். பணக்காரர்கள் தியாகம் செய்யவேண்டும். அவர்களைப் பலவந்தப்படுத்தினால் காரியம் நடக்காது."

"தொழிலாளர்களிடம் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், கொஞ்ச காலத்துக்குப் பொறுத்திருங்கள். நியாயமாகக் கிடைக்கவேண்டியதைவிட கொஞ்சம் குறைவாகக் கூலி கிடைத்தாலும் கொஞ்சம் பொறுத்திருந்து உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டே போங்கள்."

"நாம் கூறும் வழியைக் கைவிட்டுவேறு வழிகளில் நமது இலட்சியத்தைச் சாதிக்க முடியுமென்று கூறுவோர் வாயளவில் பேசுகிறார்களேயொழிய செயலளவில் எதையும் காட்டுவதில்லை."

"எங்களைவிட இன்னும் அதிகத் திறமையுடன் செயலாற்ற முடியுமென்று யாராவது நினைத்தால், அவர்கள் வந்து பொறுப்பு ஏற்கட்டும். நான் அவர்களைப் பாராட்டுவேன்."

"சிற்சில சமயங்களில் சிலருக்குத் தண்டனைகொடுப்பது அவசியமே. ஆனால் குற்றமென மெய்ப்பிக்கப்படவேண்டும். எனது வழி வேறு. அன்பு மூலமாக அவர்களுடைய மனதை உருக வைக்க வேண்டும்.

— சர்தார் பட்டேல் —

அவருக்கு எழுபத்திநான்காவது ஆண்டு பூர்த்தியாகி, எழுபத்தைந்தாவது ஆண்டு தொடங்கி இருக்கிறது. அவரே கூறி இருப்பதுபோல இத்துணைக் கண்டத்தில் வசிப்பவர்கள் இவ்வளவு காலம் உயிர்வாழ்வது என்பது அருபொருள்தான். மேலும் சிலகாலம் அவர் உயிர்வாழவேண்டும். இதுவே நமது உளம் நிறைந்த விருப்பம். நாம் இவ்வாறு விரும்புவதற்குத் தகுந்த காரணங்கள் பல உண்டு. அதிலே முதன்மையானது, உள்ளத்திலே ஒன்றை வைத்துக்கொண்டு, உதட்டிலே ஒன்றை உச்சரித்து, உண்மையைப் பிறர் அறிய முடியாமல் மறைத்து, மக்களை மட்கத்தில் ஆழ்த்தும் பண்பு, அவரிடம் என்றும் இருந்ததில்லை என்பதாகும். அகமும் புறமும் ஒத்திருக்கும் காரணத்தால், சுயராஜ்ய சர்க்காரின் போக்கும் அமைப்பும் எப்படி இருந்துவருகிறது என்பதைப் பலரும் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. பண்டித ஜவகர் போன்று சமதாமம் பேசி பயிற்சி பெற்றவர் அல்ல, பட்டேல்! பண்டிதர் பேச்சில், படித்த இளைஞர்கள் மயங்குவதுபோல பட்டேலின் சொற்களிலே மோகம் கொண்டதில்லை. உயர்ந்த கோட்பாடுகளைக் கூறி, கேட்போர் உள்ளத்தை என்றும் பண்டிதர் போல் பட்டேல், கொள்ளை கொண்டதில்லை. பண மூட்டைகளின் பாதுகாப்புப் படையின் தளகர்த்தராகவே பட்டேல் இருந்து வந்திருக்கிறார். பேச சந்தர்ப்பம் கிடைக்கின்றபொழுதெல்லாம், பணக்காரர்களுக்குள்ள பணக் கஷ்டத்தையும், வாழ்க்கைவேதனையும், தேசத்தைத் துரும்பாக்கும் பெரும் கவலைகளையும், கேட்பவர் மனமிகை, பட்டேல் பிரசிங்கிப்பார். தாங்கள் படும் அல்லல்களை முதலாளிகளால் கூட விளக்கிக் கூற முடியாத அளவிற்குப் பட்டேல் புட்டுப் புட்டுப்பகட்டாகப் பேசுவார். எனவே, ஜவகரிடமிருந்து தெரிந்துகொள்ள முடியாமல் விழிக்கும் பிரச்சினையை, அதாவது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டத்தை, சர்தார் பட்டேலின் கள்ளமில்லாக் கருத்துரைகளால், நாம் நன்கு தெரிந்துகொள்ளமுடிகிறது. இது பற்றித்தான், சர்தார் மேலும் நீண்டகாலம் திடதேகத்தோடு உயிர்வாழ்ந்து, சுயராஜ்ய சர்க்காரின் செல்வச்சீரமைப்பின் தன்மையை அடிக்கடி விளக்கிக் கூறி, பொதுமக்களுக்கு எச்சரிகை செய்துவரவேண்டுமென்று நாம் கோருகிறோம்.

பணக்காரர்கள் ரொம்ப ரொம்ப சங்கடப்படுகிறார்களாம்! அவர்களைப் பயமுறுத்துவதால் நல்ல பலன் விளையாதாம்! நாம் பணிந்து கொடுத்து, அதைக் கண்டு அவர்கள் பரவசப்பட்டு, மனம் இளகி, நாட்டின் உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவும்

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

மக்களை அடிமைப்படுத்துவதற்கு மக்களாட்சி என்பது பெயரா?

பாதுகாப்புச் சட்டம் நிலைத்த சட்டமாவதேன்?

போர்க்காலங்களில் அவசர நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கென்று விதிக்கும் பாதுகாப்புச் சட்டங்கள் போர் முடிந்தவுடன் முடிவெய்திவிடுவது என்பது இயற்கை.

ஆனால், நம் நாட்டிலே போர் மூண்ட பல ஆண்டுகளாகியும் ஆளவந்தவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் உதவியில்லாமல் ஆட்சி செய்ய முடியாதென்னும் நிலைமை ஏற்பட்டது.

ஆனால், ஆளவந்தார்கள் கையாண்ட இந்தப் பாதுகாப்புச் சட்டம் பயனற்றது என்பது மெய்ப்பிக்கப்பட்டவுடனே நீதிமன்றத்தார், அரசாங்கம் அனுசரிக்கும் இந்தப் பாதுகாப்புச் சட்டம் துருப்பிடித்து இற்றுப்போய்விட்டதென்பதை அறிவித்தவுடனே, சென்னை மாகாண ஆட்சிப் பீடத்தமர்ந்த காங்கிரஸ்காரர்கள், அந்தப் பாதுகாப்புச் சட்டத்தைப் புதுப்பித்து, நீதிமன்றத்தார் தங்கள் செயலில் தலையிடாதபடி தங்களுக்குப் பாதுகாப்பிருக்க பனுசெய்து கொண்டனர். ஆனால் அதிகம் குறைகாணும் சட்ட மூளைகள் நாட்டில் இருக்கவே இப்போது ஆளவந்தவர்கள், எந்தவகையிலும் எவரும் தங்கள் செய்கைகளை நீதிமன்றத்தில் கிளறி வைத்து விசாரணைக்குக்கொண்டுவர முடியாதபாதுகாப்புகளுடன் நிலைத்த சட்டமாக்கிவிட முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாக அறிகிறோம்.

இவ்வண்ணம் பாதுகாப்புச் சட்டம் நிரந்தரச் சட்டமாகிவிடுமானால், நாட்டிலே நீதியையும், நிர்வாகத்தையும் தனித்தனியே பிரித்து வைத்துவிட்டால்கூட, அதனால் மக்கள் வாழ்வுயர்ந்துவிடும் என்றுகூறிவிடுவதற்கில்லை.

பாதுகாப்புச் சட்டம், ஆள் தூக்கிச் சட்ட ரகத்தைச் சேர்ந்தது. மக்களை அடிமைப்படுத்தி ஆண்ட வர்க்கத்தார்கூட, இப்படி நிரந்தரமாகச் சட்டமாக்கி ஆட்சி செய்ய அஞ்சினர்.

ஆனால் மக்களுக்காக, மக்கள் பிரதிநிதிகள் இருந்து மக்கள் ஆட்சி நடத்துவதாகக் கூறிக் கொள்பவர்கள், மக்களை அடிமைத்தனத்தில் ஆழ்த்திவைத்து தனிக் காட்டுராஜா ஆட்சியை நடத்த முயற்சி செய்தால், இத்தகைய முயற்சி வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதே யாகும். நீதி-நிர்வாகம் பிரிந்துவிட்டால்கூட இத்தகைய நிரந்தர சட்டத்தின்கீழ் மக்கள் நியாயம் பெற்றுவிட முடியும் என்று சொல்வதற்கில்லை. இந்தச் சட்டங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டே நீதிபதிகள் தீர்ப்புக் கூறவேண்டியவர்களாவார்களாதலின் பிரிவினை செய்தாலுங்கூட, இத்தகைய கொடுங்கோன்மையான சட்டத்தினைப் பயன்படுத்தி ஆளவந்தார்கள் சர்வாதிகாரிகளாக ஆகலாம். இதை நீதி மன்றத்தின் மூலம் தடை செய்யப் பொதுமக்களால் இயலாதாகையால், இத்தகைய முயற்சி, மக்களுரிமையைப் பறிப்பதேயாகும்.

வட இந்தியாவில் பயிர் விளைவுப்பெருக்க ஏற்பாடு

நம் நாட்டின் கதி என்ன?

உலக பாங்கியில் இந்தியா வாங்கியுள்ள கடன் தொகையைக் கொண்டு, வட இந்தியாவில் 30 லட்சம் ஏக்கர் புதர்ப்பிரதேசம் பயிர் விளையும் நிலமாக்கப்படப் போகிறதென்று உலக பாங்க் தலைவர் தெரிவிக்கிறார். இந்த 30 லட்சம் ஏக்கரும் பயிர்விளையும் நிலமாக, 7 ஆண்டுகள் ஆகுமாம். ஆனால் அதற்குள்ளாகவே 40 லட்சம் டன் தானியம் அதில் பயிராகுமென்றும், விளைநிலமாக்கும் வேலை முற்றுப் பெற்றவுடன், ஆண்டொன்றுக்கு 10 லட்சம் டன்கள் விகிதம் உணவுத் தானியங்கள் பயிராகுமென்றும் அவர் கூறியுள்ளார். தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் மூலம் 30 லட்சம் ஏக்கா தரிசு நிலங்கள் பயிரிடப்படலாமாம். ஆனால் இவ்வளவும் வடநாடு மயமாயிருந்தால், தென்னாட்டைப் பற்றிய அக்கறை எவருக்குமேயில்லையா? தமிழ்நாட்டுத் தேசபக்தர்களுக்கு இதுபற்றிக் கவலையே இல்லையா? தென்னாட்டை வறிய நிலையில் வைப்பதுதான் தேசபக்தி போலும்!

ஆர். எஸ். எஸ்.—காங்கிரஸ் காதல் வளர்கிறது!

தோழர் தாண்டனும் தட்டிக்கொடுக்கிறார்!

அண்மையில் நாகபுரியில் கூடிய காங்கிரஸ் ஊழியர் கூட்டம் ஒன்றில் பேசிய ஐக்கிய மாகாண சட்டசபைத் தலைவர் தோழர் புருஷோத்தமதாஸ் தாண்டன் அவர்கள், ரா. சு. சே. சங்கம் தனது பலாத்கார மனப்பான்மையை விட்டுவிட்டால், அதனைக் காங்கிரசில் சேர்த்துக் கொள்ளுவதில் குற்றமில்லையென்றும், ரா. சு. சே. சங்கத்தைக் காங்கிரசில் சேர்த்துக் கொள்ளலாமென்று அண்மையில் காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தை ஆதரிப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். என்ன இருந்தாலும் காங்கிரஸ்காரர்களின் உள்ளத்திலிருந்து ஜாதி சமயப்பற்று நீங்கவில்லை என்பதற்குத் தோழர் தாண்டனின் பேச்சு ஒரு எடுத்துக் காட்டு. தோழர் தாண்டன் பல சந்தர்ப்பங்களில் காங்கிரசைக் கண்டித்தவர். அப்படிப்பட்ட கண்ணியர் இன்று தனது பெயரும் அறியாமல், ரா. சு. சே. சங்கத்தை இந்தகைபேர்தி வரவேற்கிறார். காரியக் கமிட்டி செய்தது சரி என்று சொல்லித் தட்டிக் கொடுக்கிறார்.

ஆரம்பத்தில் படேல் ஒருவர்தான் ரா.சு.சே. சங்கத்தை ஆதரிக்கிறார் என்று பேசப்பட்டது. அண்மையில் பட்டாபியும் ஆதரிக்கிறார். அடுத்து, புருஷோத்தமதாஸ் தாண்டனும் ஆதரிக்க ஆரம்பித்திருக்கிறார். இன்னும் எந்தெந்த காங்கிரஸ் தலைவர்கள் ஆதரிக்கப் போகிறார்களோ தெரியவில்லை. இவ்வண்ணம் நாளுக்கு நாள் ரா. சு. சே. சங்கத்தின் மீது காங்கிரஸ்காரர்களுக்குக் காதல் வளர்கிறது. ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சியில் பாசிசம் குடி புகுந்து விட்டது. இப்பொழுது மத வெறியும் குடிபுக ஆரம்பித்திருக்கிறது. இந்த இரண்டும் சேர்ந்துவிட்டால் கேட்கவாவேண்டும்?

மாலை மணி

சென்னை 3—11—49 வியாழக்கிழமை

சொற்கோட்டைச் சூரர்கள்!

"உங்களுடைய ஒரு டஜன் மந்திரிகள் நிலத்தை உழுதும், நூல் நூற்றும் கோடிக்கணக்கான மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமா?"

என்று கல்லூரி மாணவர்களைக் கண்டு கேட்கிறார், காங்கிரஸ் தலைவர் பட்டாபி சீத்தாராமையா.

உணவு,— துணிப்பிரச்சினை முதலியவற்றைத் தீர்ப்பதில், கல்லூரி மாணவர்கள் ஒன்றும் செய்யவில்லை என்பதைத் தெரிந்துகொண்டாராம் அவர்! அப்படித் தெரிந்துகொண்ட நிலையில் நின்றுதான், பச்சையப்பன் கல்லூரி மாணவர்களைப் பார்த்துக் கேட்கிறாராம், மேலே குறிப்பிட்டிருக்கும் கேள்வியை! இப்படிச் செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் துணித் தேவையை ஒரு டஜன் மந்திரிகள்தாம் உழுதும் நூல் நூற்றும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று, எப்பொழுது, எங்கு, எவர் வற்புறுத்தினர். எந்த நல்லறிவு படைத்தவர்தான் வற்புறுத்தியிருப்பர். அப்படி யாரேனும் வற்புறுத்தினர்கள் என்று சுட்டிக் காட்டப்படுமானல், அவர்கள் 'கீழ்ப்பாக்க மருத்துவச் சாலையில்' சேர்க்கப்பட்டவர்களாகவோ, அல்லது சேர்க்கப்படவேண்டியவர்களாகவோதான் இருக்கவேண்டும்! அப்படிப்பட்டவர்களின் 'அரிய' தொடர்பு பட்டாபி சீத்தாராமையாவுக்கு, எங்கு ஏற்பட்டதோ, அறியக்கூடவில்லை!

உணவு—துணித் தேவையை நிறைவேற்றித் தரவேண்டியவர்கள், ஆட்சிப்பீடம் ஏறியிருக்கும் ஆளவந்தார்கள்தாம், என்று பேரறிஞர் குழுவினர் கூறியிருப்பார்களே யொழிய, அந்தத் தேவைகளை மந்திரிகளேதாம் உழுதும்—நூற்றும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று யாரும் வற்புறுத்தியிருக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட நிலையில், கல்விப் பயிற்சி பெறும் பொருட்டு, கல்லூரி நுழைந்திருக்கும் நல்லறிவு படைத்த மாணவர்களா, மந்திரிகளே உழ வேண்டும், மந்திரிகளே நூற்க வேண்டும் என்று வற்புறுத்தியிருப்பார்கள்? எதையோ நினைத்துக்கொண்டு எங்கோ கேள்வி கேட்கிறார் பட்டாபியார்! சொல்லும், இடமும் முரண்பட்டு நிற்கின்றன.

உணவு—துணிப் பிரச்சினைகளை மாணவர்கள் எப்படித் தீர்ப்பார்கள்? அவர்களால் எப்படித் தீர்க்க முடியும்? அவர்கள் தீர்ப்பார்கள் என்று பட்டாபி போன்ற தலைவர்கள்தாம் எப்படி எதிர்பார்க்கலாம்! அப்படிப்பட்ட பிரச்சினையைத் **தீர்த்துவைப்பதற்காக** அல்லவே அவர்கள் கல்லூரிக்கு அனுப்பப்பட்டுள்ளது! அப்படிப்பட்டபிரச்சினைகளை **அறிந்துகொள்வதற்காகவே** அவர்கள் அங்கு அனுப்பப்பட்டுள்ளார்கள்! இந்தத் தோற்றநிலை அறிவைக் கூடவா மறந்துவிட்டு, ஆயாசப்படவேண்டும், அனைத்திந்திய காங்கிரஸின் தலைவர்! மாணவர்களிடம் எதிர்பார்க்க வேண்டாததை, எதிர்பார்த்து, அது ஏற்படவில்லையே என்று ஏங்கி, ஏமாந்துபோக வேண்டிய அவசியநிலை நாட்டுத் தலைவர்களின் வாழ்க்கையில் ஏற்படக்கூடாதே! ஆனல் தோழர் பட்டாபியிடம் அந்த நிலை காணப்படுவதற்குப் பெரிதும் இரங்கத்தான் வேண்டியிருக்கிறது!

தோழர் பட்டாபி அத்தோடு நிற்கவில்லை, மேலும் கேட்கிறார். **"அவர்கள் ஜாலவித்தைக்காரர்களா, என்ன?"** என்று. அந்த ஒரு டஜன் மந்திரிகளும் ஜாலவித்தைக்காரர்களாக இருந்தால், உணவு-துணிப்பிரச்சினைகள் நீங்கிவிடும் என்பது, காங்கிரஸ் தலைவரின் கருத்துப் போலும்! அவர் எண்ணுவதுபோல், உணவு—துணிப் பிரச்சினைகளை, ஜாலவித்தைக்காரர்கள், மற்றவர்கள் பொருட்டுத்தீர்த்துவைக்காவிட்டாலும் தங்களைப் பொறுத்தவரையிலுமாவது தீர்த்துக்கொள்ளலாமே! நாட்டில் திரியும் ஜாலவித்தைக்காரர்களால்,அந்த அளவுக்காவது முடிகிறதா, என்றல், அதுவும் இல்லையே! அப்படிப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் திறமை அவர்கள்பால் உண்டென்றல், உணவு—துணி உற்பத்திப் பெருக்க இலாகாக்களின் உயர்தர அதிகாரிகளாக, ஏன், உணவு—துணி மந்திரிகளாக அவர்களை நியமிக்கலாமே! அந்த அளவு நம்பிக்கை, ஆட்சி அவைக்கும் இல்லை, கொடுத்தப் பணியைச் செய்து முடிக்கும் திறம் தம்பால் உண்டென நினைக்கும் உறுதி ஜாலவித்தைக்காரருக்கும் இல்லை!

உழுவதும்—நூற்பதும் மந்திரிகள் வேலை அல்ல; அவர்கள் செய்யவேண்டிய அவசியமுமில்லை; அவர்கள் செய்யவுங் கூடாது. உழைக்கும் திறனுள்ளோரைக் கொண்டு உழச் செய்வதும், அதன்மூலம் உற்பத்தியைப் பெருகச் செய்வதும், நூற்கச் செய்வதும், அதன் மூலம் தேவையை நிறைவேற்றச் செய்வதும் ஆன பணிகளை மந்திரிகள் உற்பத்தி செய்யவேண்டும். செய்தால்உணவும்—துணியும் தாமாக உற்பத்தியாகும். உழைப்போர்க்கு நிலமும், நீர்ப்பாசன வசதியும், ஏர் கலப்பைச் சாதனங்கள் அல்லது நவீன யந்திரப் பொருள்களும், விதைகளும் கொடுத்தால், உணவு உற்பத்தித் தானகப் பெருகும். இவற்றைச் செய்ய ஒரு டஜன் மந்திரிகள் போதும்; இவற்றைத்தான் அந்த ஒரு டஜன் மந்திரிகளும் செய்ய வேண்டும்; இவற்றை அந்த ஒரு டஜன் மந்திரிகள் மட்டுமேதான் செய்யக் கூடியவகையில் அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன; இதைத் தவிர வேறு எதையும் செய்யச் சொல்லவில்லை உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில். அதுபோலவே துணிப் பெருக்கத்திற்கான யந்திர முதலிய சாதனங்களை அமைத்துத் தர வேண்டிய பொறுப்பை ஒரு டஜன் மந்திரிகள் ஏற்றுக்கொண்டால், நூற்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள ஏராளமான தொழிலாளர்கள் இருக்கிறர்கள்; அது பற்றி மந்திரிகள் கவலைப்பட வேண்டாம்; அவர்கள் சார்பாகப் பட்டாபியும் கவலைப்பட வேண்டாம்!

உண்மையிலேயே எதைச் செய்ய வேண்டாம் என்று மக்கள் மந்திரிமார்களுக்குக் கூறுகிறர்களோ, அதைத்தான் மந்திரிமார்களும், மற்றைய காங்கிரஸ் ஆளவந்தார்களும் முனைந்து செய்கிறர்கள்.

"மந்திரிகள் மந்திரிகளுக்குரிய வேலைகளைக் கவனிக்கட்டும்; உழ வேண்டாம்; தக்ளி நூற்க வேண்டாம்; வெற்றுச் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டாம்; ஒப்படைத்த வேலைகளைச் சரியாகச் செய்தால் அதுவே போதும்" என்று இப்படியெல்லாந்தான் கூறிப் பார்க்கிறர்கள் மக்கள். எங்கே கேட்கிறர்கள் மந்திரிகளும், அவர்களுக்கு மேலுள்ள கவர்னர்களும், கவர்னர் ஜெனரலும்! சென்னை மாகாண மந்திரிமார்களும் சரி, பிற மாகாண மந்திரிமார்களும் சரி, தக்ளி—கைராட்டை நூற்பு யக்ஞத்தில் ஈடுபடுகிறர்கள்;அவர்கள் கவலைப்பட வேண்டாத வேலை! கவர்னர் மாஞ்செடி நடுகிறர்; அவர் செய்ய வேண்டாத வேலை! பிரதமர் நேரு டிராக்டரில் ஏறி உட்கார்ந்துகொண்டு உழுவதாகப் பாவனை செய்கிறர்; அவருக்கு வேலையற்ற வேலை! கவர்னர் ஜெனரல் ஆச்சாரியார் ஏர்கலப்பையைப் பிடித்துத் தன் தோட்டத்தை உழுவது போல் பகட்டு செய்து படம் எடுத்துக் கொள்கிறர்; தேவையில்லாத வெறும் விளம்பரம்! இந்த நிலையில்தான், பச்சையப்பன் கல்லூரி மாணவர்களைப் பார்த்துக் கேட்கிறர், பட்டாபி சீத்தாராமையா, "ஒரு டஜன் மந்திரிகள் உழுது தேவையை நிறைவேற்றிவிட முடியுமா" என்று! யார் மந்திரிகளை உழச்சொன்னர்கள்? ஆனல் ஆளவந்தார்களோ உணவு உற்பத்தியைப் பெருக்குவதுபோல் பாவனையாக உழுது, வெளிப்பகட்டு வேடம் புனைகிறர்கள்! இது ஏன்? என்று தோழர் பட்டாபியார் மாணவர்களைப் பார்த்துக் கேட்பதைவிட, மந்திரிமார்களைப் பார்த்துக் கேட்டிருக்கலாம்! ஏனே அதைச் செய்ய மறுக்கிறர்!

மந்திரிமார்கள் ஜாலவித்தைக்காரர்களா? என்று கேட்கிறர் தோழர் பட்டாபி. இல்லை! இல்லை!! முக்காலும் இல்லை!!! இவர்கள் வெறும் ஜாலவித்தைக்காரர்களல்ல! ஜாலவித்தைக்காரனவது ஏதோ தந்திரம் செய்து காட்டுகிறனே! இவர்கள் வெறும் **சொற்கோட்டைக் கட்டும் சூரர்கள்!** எனவேதான் உணவு—துணி உற்பத்திப் பெருக்கத்தை வெறும் சொற்களிலே மட்டும் சுட்டிக் காட்டுகிறர்கள்!

உலைக்கூடம்

['சம்மட்டி']

சனதன தர்ம பூஷண ஜார்ஜ் ஆம்ஸ்ட்ராங் ஆச்சாரிய சுவாமிகள்!

தலைப்பைப் பார்த்த உடனே 'சம்மட்டி'யாரை கீழ்பாக்கம் மேதாவிகள் சாலைக்கு, நிரந்தரக் குடியாக பலவந்தமாகவாவது குடியேற்றி விடக் கூடாதா என்று நினைத்து விடாதீர்கள்! கண்டிப்பாக முடிவில் ஏமாந்துவிடப் போகிறவர்கள் நீங்களாகத்தான் இருப்பீர்கள்!

ஒருவர் சொல்லும் வார்த்தைகளைக் கொண்டுதானே அவருடைய மன நிலையை நாம் அறிந்துகொள்ளுகிறேம். 'பிறப்பிலே உயர்வு தாழ்வு கிடையாது; மக்களாகப் பிறந்தவர்கள் அனைவரும் சமம்' என்று பேசுகிறவர்களைப் பார்த்து இவர் ஒரு 'சீர்திருத்தவாதி'யாக இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறேம். 'தொண்டைமண்டலம்' என்று சொல்லிக்கொள்ளுகிற ஜாதி ஆணவம் கொண்ட குடும்பத்தில் பிறந்த ஒருவர், 'அனைவரும் சமம்' என்று பேசுவதோடு மட்டும் நின்றுவிடாமல் 'தீண்டப்படாதவர்' என்று பேசப்படும் ஒருவரை, தனது வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய், சாப்பாட்டு அறையில் சமத்துவமாக ஒக்க இருந்து உணவு எடுத்துக் கொண்டால், அன்னரைப் பற்றி நாம் என்ன கூறுவோம்? 'அவர், வெறும் வாய்ப்பேச்சு வீரர் அல்ல, நல்லதென்று கூறி வரும் கோட்பாட்டை செயலளவிலும் நடத்திக் காட்டும் 'சீர்திருத்தக் கர்ம வீரர்' என்றும் புகழ்ந்து பேசுவோம்.

மனிதனை மனிதன் இழிவுபடுத்தும் அநீதியில் நம்பிக்கைத் துளியும் இல்லாமல், நடந்துகொள்ளுகிறவர்களை, அவர்கள் எந்த நாட்டில் பிறந்தவர்களாக இருந்தாலும், ஒரு கட்சியினர்—அதாவது 'முற்போக்குவாதிகள்' என்று குறிப்பிடுவோம்.

பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை ஒழித்து உழைப்பாளிகளுக்கு வாழ்வு தேடுவோரை, 'பொதுவுடைமைவாதிகள்—சமதர்மிகள்' என்று சுட்டிக் காட்டுவோம். இதிலும், நாடு-நிறம் எதனையும் கவனிக்காமல், இவ்வாறு கூறுகிறவர்கள் அத்துணைப் பேரையும் ஒரே அணியில் சேர்த்துப் பேசுவோம், இது தான் அனுபவம்.

நமது 'பாரத' மண்ணில் தான், இந்தப் பரந்த உலகத்தில் வேறு எங்கும் இல்லாத. விஷ விருடசங்கள் எல்லாம், வளர்ந்து வளம்பெற்று வருகின்றன! மனிதர்கள் கூட கருவில் தோன்றும்போதே, முதலியார், செட்டியார், ரெட்டியார், நாயக்கர், சாஸ்திரியார், சடாவல்லபர், சர்மா: ஆச்சாரியார் அய்யங்கார், பண்டிதர், முகர்ஜி, சட்டர்ஜி, பானர்ஜி என்றெல்லாம் ஜாதியைக் குறிக்கும் வால்களோடு உருவெடுத்து விடுகிறர்கள். தொட்டிலிலிருந்து சுடுகாட்டில் வெந்து சாம்பலான பின்னரும் கூட ஜாதிவால் கண்ணுக்குத் தெரியாமல் தனது சேஷ்டையைச் செய்துகொண்டு இருக்கின்றன. இந்த மனிதப் பிறவிகளைப் பற்றி நாம் என்ன பேசிகிறேம்? பத்தாம் பசலிகள்—சனதனிகள்—ஜாதி கர்வம் பிடித்தவர்கள் — வருணஸ்ரமிகள் என்றெல்லாம் வர்ணிக்கிறேம். ஒரே மனநிலை கொண்டதுதான் இதுகள் எல்லாம். இதுகளைப் பிடித்திருக்கும் மூல நோய் ஒன்றுதான். அந்த நோயின் அறிகுறிகளில்தான் தர வித்தியாசம் இருந்து வருகிறது. இதே மூல நோயால் பிடிக்கப்பட்டுள்ளவர்தான் ஜார்ஜ் ஆம்ஸ்ட்ராங் என்ற அமெரிக்கர். அவரும், மனிதர்களில் உயர்வு தாழ்வை காண்கிறர். வெள்ளையர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் தாழ்ந்தவர்கள் என்ற ஜாதி கர்வம் கொண்டிருக்கிறர். 'நாடு-நிறம் என்ற இரு பாகுபாடுகள், அவரைப் பிடித்திருக்கும்ஜாதிஆணவநோயிக்கு அறிகுறிகளாக இருந்து வருகின்றன. அவர் ஒரு பெரும் பணக்காரர் எண்ணெய் வியாபார கோடீஸ்வரர். ஐந்து கோடி டாலரை, ஜபர்சன் ராணுவ கல்லூரிக்குத் தானமாகக் கொடுக்க முன்வந்தார். ஆனல் ஒரு நிபந்தனையும் விதித்தார். ஆப்ரிக்கர்களுக்கும் ஆசியாக்காரர்களுக்கும் அந்தப் பெரும் தொகையில் ஒரு செப்புக் காசும் செலவழிக்கக் கூடாது என்பதுதான் அந்த நிபந்தனை! கல்லூரி அதிகாரிகள், அவருடைய விருப்பத்தை மறுத்துவிட்டனர். அவரும் வள்ளலாவதிலிருந்து வாபஸ் ஆகிவிட்டார்!

இப்போழுது கூறுங்கள் திருப்பதி கீழ் நாட்டுக் கலைக் கல்லூரியில் ஜாதி பாகுபாடு இல்லாமல் ஒன்றுக உட்கார்ந்து சாப்பிடுவது கூடாது என்று சில நாளைக்கு முன் கண்டித்த அய்யங்கார் சுவாமிக்கும், அமெரிக்க ஆம்ஸ்ட்ராங்குக்கும், மன நிலையில் ஒரு அங்குலமாவது தூர மிருக்கிறதா என்று கண்டுபிடித்துக் கூறுங்கள் பார்ப்போம்! ஏன், அந்த வெள்ளை அமெரிக்கரை சனதன தர்மபூஷண ஜார்ஜ் ஆம்ஸ்டிராங் அச்சாரியசுவாமிகள் என்று கூறக் கூடாது? இப்போழுது யாருக்குப் பைத்தியக்கார விடுதியில் இடம் ஒதுக்க வேண்டுமென்பதை, நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்!

அமெரிக்கா அளித்த கடனின் பலன்

இந்தியாவில் இஞ்சின் உற்பத்தி கூடாதென தடை!

இந்தியாவில் உள்ள ரயில் இஞ்சின்களில் நால்பகுதிக்கு மேற்பட்டவை 40 ஆண்டுக்கு மேல் உழைத்தவை. அடிக்கடி மராமத்துச் செய்யவேண்டிய நிலையிலுள்ளவை. எனவே, இஞ்சின்கள் பெருவாரியாக இந்நாட்டுக்குத் தேவைப்படுகின்றன.

ஆனல், ரயில்வே அபிவிருத்திக்கென இந்தியாவுக்கு 340 லட்சம டாலர் கடன் கொடுத்த உலக பாங்கி தலைவர், இந்தியாவில் பல தொல்லைகள் ஏற்பட்டிருப்பதற்குரிய காரணங்களைக் கூறுகையில், அவ்வளவாக அனுபவமில்லாதவர்கள் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பதைச் சுட்டிக்காட்டினர். மேலும், இந்தியாவில் இஞ்சின் கட்டும் தொழிற்சாலை அமைக்கக் கூடாதென்றும், அப்படி அமைக்கும் கருத்தையே நாம் பலமாக ஆட்சேபிப்பதாகவும் கூறினர்.

இஞ்சின்களை உற்பத்தி செய்யும் வேலையை இந்தியா மேற்கொள்ளுதல் கூடாதென்று உலகபாங்க் நிபந்தனை போட்டிருப்பதாகவும் தெரிகிறது. ஆனல், சில்லறைப் பகுதிகளை நாம் உற்பத்தி செய்யலாமாம்.

இந்தியா சுதந்தரநாடு என்ற நிலையில், நாம் விரும்புவதைச் செய்யும் உரிமையில், பிறர் தலையிட்டு நம் நாட்டுக்கு நிபந்தனை போடும் அளவுக்கு நம் நாட்டின் நிலைமை தாழ்ந்தப்பட்டிருக்கிறது என்பது, நாட்டுப் பற்றுடைய எவராலும் சகிக்கக்குரியதாகாது. ஆனல், தேசபக்தர்கள்தான் இத்தகைய செயல்களைச் செய்கின்றர்கள். நாட்டுநலனில் அக்கரை உடையவர்களே இவ்வாறு நிபந்தனைகளைப் பெறுகிறர்கள் என்றல், இந்தத் தேசபக்திக்குப் பொருளே எங்குக் கண்டு தேடுவது!

இந்தியைக் கட்டாயமாக்கும் முயற்சி

செத்த சமஸ்கிருதத்தைத் தலைமைப் பீடத்தில் வைக்கும் அவா

—(0)—

இவை மேல்சாதிக்காரர்களின் சதி என்கிறது ஜட்பட்தோரக் மண்டல்

தமிழ்நாட்டிலே 100-க்கு 99½ பேர் தமிழ் பேசுபவர்கள். அப்படியிருக்க, இங்கே இன்னும் தமிழ், அரசாங்கமொழியாக வில்லை. அதை ஆக்க முன்னணியிலுள்ளவர்கள் முயற்சி செய்ய வில்லை. இதுபற்றி ஆட்சிப்பீடத்தாருக்கு அக்கறையே இல்லை. ஆனால் அதேசமயத்தில் ஒரு சிறு கூட்டத்தார் சமஸ்கிருதத்தைப் பெருமைப்படுத்தியும், அனைவரும் அதையே விரும்பிப் படிக்க வேண்டுமென்றும் கடும் பிரசாரம் செய்யத் துவங்கிவிட்டனர். பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள் இதில் மிகத் தீவிரமாக இறங்கித் தங்கள் செல்வாக்கை யெல்லாம் இதில் பயன்படுத்துகின்றனர். கல்வி மந்திரிப் பதவி வகிப்பவர் கூட, வேறு முக்கியமான வேலைகள் எவ்வளவோ இருக்க, அவற்றை விட்டு, சமஸ்கிருதப் பிரசாரம்தான் இப்போது நாட்டிற்கு மிக அவசியம் எனக் கருதிப் பிரசாரம் செய்துவருகிறார்.

இதேபோன்று அ. நி. சபை நிறைவேற்றிய இந்திய அரசியல் திட்டத்தைச் சமஸ்கிருதத்தில் மூலத்தில் மொழி பெயர்ப்பதென்று, ஒரு பிற்போக்குச் சக்தி முயன்று வெற்றி கண்டுவிட்டது.

இதேபோன்று இந்தி பிரசாரமும் பலமாக நடக்கிறது. தமிழ் படித்தார்களா இல்லையா என்பதைக்கூட அறிந்து கொள்ளக் கவலைப்படாதவர்கள் இந்தி படிப்பதன் அவசியத்தை வற்புறுத்துகின்றனர்.

இவ்வாறு நாட்டிலே இந்தியும் சமஸ்கிருதமும் ஒரு சிறு கூட்டத்தினரால் வற்புறுத்தப்படுவதன் மர்மத்தைப் பஞ்சாபைச் சேர்ந்த ஜட்பட் தோரக்மண்டலம் நன்கு வெளிப்படுத்தியிருக்கிறது.

கிழக்குப் பஞ்சாபிலும் இது போன்றதொரு மொழிப் போராட்டம் தலைதூக்கி நிற்கிறது. கிழக்குப் பஞ்சாபில் உள்ள சீக்கியர் இந்துக்கள் ஆகிய அனைவருமே பேசும் மொழி குர்முகி லிபியிலுள்ள பஞ்சாபிமொழியேயாகும். (தமிழ் நாட்டில் அனைவரும் தமிழையே பேசுவது போல).

ஆனால், கிழ்ப்பஞ்சாப் நாட்டின் அரசாங்க மொழியாக அனைவரும் பேசவும் குர்முகி லிபி மொழியை ஏற்படுத்திவிட வேண்டுமென்று சீக்கியர் முயன்ற போது, அங்குள்ள இந்துக்கள் அதை எதிர்த்து, அரசாங்க மொழியாக இந்தியையே ஏற்படுத்தவேண்டுமென்று வற்புறுத்தத்தொடங்கிவிட்டனர்; அதற்காகப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

கிழ்ப் பஞ்சாபில் உள்ள சீக்கியரின் 100-க்கு 95 பேர் ஜாட்கள். அதாவது உழவுத் தொழில் செய்யும் மக்கள். இந்துக்களுள் 100-க்கு 90 பேர் உயர்குலத்தார் எனப்படும் பார்ப்பனர், க்ஷத்திரியர், வைசியர்கள் எனப்படும் பனியாக்கள் முதலியவர்களே.

எனவே, இந்துக்கள் தங்களுடைய சாதி உயர்வுக்கு ஆதரவு காட்டும் தேவ மொழியை அவர்களால் கருதப்படும் இந்தியே பொதுமொழியாக வேண்டும் என்று கூறுகின்றனர். குர்முகி எழுத்துக்களுடைய மொழி, தாழ்ந்த இனமொழி எனக் கருதுகின்றனர்.

உழவுத் தொழில் புரியும் சீக்கியர்களோ அனைவராலும் பேசப்படும் மொழியாகிய குர்முகி—பஞ்சாபியே அரசாங்க மொழியாக வேண்டுமென்று வற்புறுத்துகின்றனர்.

இதுதான், கிழக்குப் பஞ்சாபில் எழுந்துள்ள மொழிப் போராட்டத்திற்கு அடிப்படையாயுள்ள காரணம். மேல்சாதிக்காராயுள்ளவர்களின் சதித்திட்டமே கிழக்குப் பஞ்சாபில் குர்முகி எழுத்துடைய பஞ்சாபி மொழிக்கு எதிர்ப்பேற்படக் காரணமாகிருக்கிறது. நியாயப்படி நடப்பதென்றால், குடியாட்சி முறையைக் கையாளுவதென்றால், பொதுமக்கள் உரிமை காக்கப்படுகிறதென்றால், குர்முகி எழுத்துடைய பஞ்சாபிதான் அங்குப் பொதுமொழியாக வரவேண்டும் என்று பஞ்சாபைச் சேர்ந்த ஜட்பட்தோரக் மண்டலம் அறிவிக்கின்றது.

தமிழ்நாட்டிலும் இந்தக் கதிதானே. தமிழ்நாட்டிலுள்ளவர்கள் அனைவரும் தமிழ் பேசுகின்றனர். தமிழையே தங்கள் உயிர் எனக் கருதுகின்றனர். ஆனால் ஒருசிலர் மட்டும் அதுவும் பிரசங்கிலர் மட்டும் சமஸ்கிருதம் தெய்வ மொழியெனக் கூறிக்கொண்டு, தமிழைச் சூத்திர மொழியாக்கி, தமிழ் நாட்டில் தமிழ் முதன்மை பெறுவதை விரும்பாமல், சமஸ்கிருதம் இந்தி என்றெல்லாம் கூச்சலிட்டுத் தங்களுக்கிருக்கும் செல்வாக்கு, திறன் அதிகாரம் அவ்வளவையும் கட்டுப்பாடாக இதற்கெனப் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே, கிழ்ப்பஞ்சாப் நாட்டில் இருக்கும் நிலைமையில்தான் தமிழ் நாட்டின் நிலைமையும் இருப்பதால், இந்த வகையான முயற்சிகள், நாட்டின் பெரும்பான்மை மக்களுடைய உரிமைக்குப் பாதகமானவை என்பதை ஆட்சிப் பீடத்தார் அறிந்து, மக்கள் உரிமைகாக்க முன்வருதல் நலம்.

ஆர். எஸ். எஸ்.-க்கு பட்டாபியின் வக்காலத்து!

காங்கிரஸ் கண்டுபிடித்திருக்கும் சமயசஞ்சீவியாம்!

ரா. சு. சே. சங்கத்தைக் காங்கிரசோடு இணைப்பது கூடாது, என்று பல காங்கிரஸ்காரர்கள் கூச்சல் போடுகின்றனர். ஆனால் படேல், பட்டாபி போன்ற காங்கிரஸ் தலைவர்கள் ரா. சு. சே. சங்கத்திடம் கொண்டிருக்கும் காதலைப் பார்த்தாலோ, காங்கிரஸ் வேறு, ரா. சு. சே. சங்கம் வேறு என்ற நினைப்புக்கே இடமேற்படுவதில்லை. இதற்கொரு எடுத்துக்காட்டு வேண்டுமானால் அண்மையில் சென்னை இராசதானிக் கல்லூரியில் அகில இந்திய காங்கிரசு தலைவர்-அல்ல, ராஷ்ட்ரபதி, பேசியிருக்கும் பேச்சைப்பார்த்தாலேபோதும். கல்லூரி மாணவர் கழகத்திலே பேசிய பட்டாபியார் மாணவர்களுக்கு மதச் சார்பற்ற சர்க்காரின் மகத்துவத்தை விளக்கிக் காட்டிவிட்டார். முஸ்லிம் லீக், ஹிந்து மகாசபை ஆகிய ஸ்தாபனங்கள் வகுப்புவாத சபைகளாம். ஆனால், ரா. சு. சே. சங்கம் மாத்திரம் அப்படியல்லவாம். அது சமய அபிவிருத்தி ஸ்தாபனமாம். ஆகவே தான் அதனை காங்கிரசில் சேர்த்துக்கொண்டார்களாம். இதுதான் பட்டாபியின் வாதம்!

முதலில் முஸ்லிம் லீகைக் குறிப்பிட்டு, அதனோடு ஹிந்துமகா சபையையும் சேர்த்து, அவை இரண்டும் வகுப்புவாத அரசியல் ஸ்தாபனங்கள் என்று சொன்ன பட்டாபியார் ரா. சு. சே. சங்கத்தை மாத்திரம் பரிசுத்தமான சபை என்கிறார். ஆனால் எந்த வகையில் இந்து மகா சபையும், ரா. சு. சே. சங்கமும், வெவ்வேறானவை என்பதுதான் நமக்குப் புரியவில்லை. இரண்டு சபைகளும் ஒரு மரத்தின் இருகிளைகளாகவே இதுகாறும் இயங்கி வந்திருக்கின்றன. இது ஒருபுறமிருக்கட்டும்.

ரா. சு. சே. சங்கம் சமய அபிவிருத்தி ஸ்தாபனம் என்கிறாரே பட்டாபியார், அது அபிவிருத்தி செய்யும் சமயம் எது? சமய சார்பற்றது, சர்வ சமயத்தினருக்கும் பொதுவானது என்றெல்லாம் புகழ்ந்து பேசப்படும் காங்கிரசு ஸ்தாபனம் சமய பற்றுடைய ரா. சு. சே. சங்கத்தோடு இங்ஙனம் கட்டிப் புரள வேண்டிய காரணம் என்ன? இவைதான் பொதுமக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டிய விஷயங்கள். இங்ஙனம் ரா. சு. சே. சங்கத்துக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுபவர் யாரோ ஒருகாங்கிரஸ்காரரல்ல; நாம் அலட்சியமாகக் கருதிவிடுவதற்கு. பேசியவர் பெரிய மனிதர்; அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர், காங்கிரசார் மொழிப்படி ராஷ்ட்ரபதி. அப்படிப்பட்டவரே இப்படிப் பேசுகிறார் என்றால், ரா. சு. சே. சங்கம் வேறு காங்கிரஸ் வேறு என்று யார்தான் சொல்லமுடியும்? அப்படிச் சொல்ல முடியாதபோது காங்கிரசைப் பொதுமக்கள் ஸ்தாபனம் என்று எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

ஆகவே, இதனைச் சுருக்கச் சொல்லவேண்டுமானால் இன்றைய நிலையில் காங்கிரஸ் வெளிப்படையாகத் தன்னை ஒரு வகுப்பு ஸ்தாபனம் என்று காட்டிக்கொள்ள பயந்து சமய அபிவிருத்தி என்று சொல்லிக்கொண்டு ரா. சு. சே. சங்கத்தை "சமய சஞ்சீவி" ஆக்கிக் கொண்டு நாட்டிலே நடமாட ஆரம்பித்திருக்கிறது என்றே சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்,

முதலாளித்துவ மூலவருக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நிலையை ஏற்படுத்த வேண்டுமாம்! இதில் நாட்டுக்குக் கேடுசூழ்கிறவர்களைத்தண்டிப்பது அவசியந்தானும்! ஆனால் அவர்கள் மீது சுமத்தப்படும் குற்றம் மெய்ப்பிக்கப்பட வேண்டுமாம்!

ஆம்! தண்டனை அளிப்பதற்கு, அடிப்படையான குற்றங்கள், நீதி சபையில் தீர்மானிக்கப்படத்தான்வேண்டும். இதுதான் அறம். வரவேற்கத் தகுந்த பண்பு. பண மூட்டைகளை, குற்றம் செய்திருப்பார்கள் என்ற சந்தேகத்தின் மீது மட்டும், குற்றம் மெய்ப்பிக்கப்படாமல், தண்டிக்கக் கூடாது என்று, தர்ம நியாயம் பேசும் பெருந்தலைவர் பட்டேல், ஏழை எளியவர்களை, வாழ்வு கருகிப்போய் வறுமையில் வேதனைபடும் வறியவர்களை, வேலையிழந்து திக்கற்ற நிலையில் தெருவில் திரியும் தொழிலாளர்களை, உடம்பிளைத்து ஊமையர்களாய் வாழ்ந்துவரும் உழைப்பாளிகளை, பாடுபட்டுத் தக்க பலன் காணாது பரிதவித்துக் கிடக்கும் பாட்டாளிகளை, போதிய காரணம் இல்லாமலே, சாட்டப்பெறும் குற்றங்கள் முறையாக மெய்ப்பிக்கப்படாமலே, சிறையிலே தள்ளி மூடப்பட்டுவிடுகிறதே, அவைகளை ஏன் கண்டிக்க வாய்திறக்கவில்லை? கண்டிக்காததோடு, அந்த அதர்ம முறையே ஏற்ற முறை—இணையற்ற முறை—என எவ்வளவோதடவை பேசிப் புளகாங்கிதம் அடைந்திருக்கிறாரே. அது ஏன்? என்ன சூட்சமம் இதில் மறைந்து இருக்கிறது? பண மூட்டைகளுக்குப் பரிவு காட்டுவதும், பாட்டாளிகளுக்குப் பகைகாட்டுவதும், மனித நீதிக்கும் ஜனநாயக தர்மத்திற்கும் நேர் விரோதமாயிற்றே!

தொழிற்சாலைகளை, முதலாளிகள் மடியில் மறைத்து வைத்துக்கொள்ள முடியாது. பெரும் பெரும் கட்டிடங்களாக, அனைவர்களுக்கும் தெரியும் நிலையில், அவைகள் இருந்துவருகின்றன. முதலாளிகள், எல்லாத் துறைகளிலும், உற்பத்தியைக் கட்டுப்படுத்தி, நாட்டு நலனைக் குட்டிச்சுவராக அடித்து வருகிறார்கள் என்பதைப் படேல் பிரபு அறியாமல் இருக்க நியாயமில்லை. சர்க்காருக்கு நியாயமாகச் சேரவேண்டிய வருமான வரியைக்கூட கொடுக்காமல், பொய்க் கணக்கு எழுதிப்பித்தலாட்டம் செய்து வருகிறார்கள் பணமூட்டைகள் என்று பேசிவருவது நாம அல்ல, படேல் படையினர் தான். இத்தகுத் திருக்கல்யாண குணங்களைக் கொண்ட பண மூட்டைகளின், கல் மனத்தை, அன்பு மூலமாக உருகவைக்கப் பார்க்கிறார், படேல் எஜமானர்!

அதே நேரத்தில், நியாயமாகத் தங்களுக்குச் சேர வேண்டிய கூலியைக் கூட கொஞ்சம் குறைத்துகொள்ள வேண்டுமென்று, தொழிலாளர்களைப் பார்த்து கோரிக்கை வெளியிடுகிறார் அதே எஜமானர்!

பட்டேலின் மனம் எவரிடத்தில் பற்றுக்கொண்டு இருக்கிறது என்பதை இது ஒன்றிலிருந்தே நாம் தெரிந்து கொள்ளலாம். இன்றியமையாது தேவைப்படும் பொருட்களின் விலை ஏறி இருப்பதால் தொழிலாளர் வாங்கும் கூலி, வாழ்க்கைச் செலவைச் சரிகட்டுவதாக இல்லை. விம்மி விம்மி வாழ்கிறார்கள் வேதனையோடு பாட்டாளிகள்! வேண்டுகோள் வெளியிடுகிறார், இன்று வாங்கும் குறைந்த கூலியையும் கொஞ்சம் குறைத்துக்கொண்டு உற்பத்தியைப்பெருக்குங்கள் என்று! என்ன கருணை இந்த எஜமானருக்கு! நாடு உருப்பட அவர்கண்ட வழி இது!

தாங்கள் ஆட்சி செய்வது திறமையானதாக இல்லையென்று சொல்லப்படுமானால், வேறு யாராவது வந்து பொறுப்பேற்கட்டும். அவர்களைப் பாராட்டத் தயாராக இருக்கிறோம் என்று பட்டேல் பாட்டிசைக்கிறார். தன் கண்ணை மூடிக்கொண்டால் பூலோகமே இருண்டுவிட்டதாக பூனை எண்ணிக்கொள்ளுமாம்! இந்தவகையைச் சேர்ந்ததுதான் பட்டேலின் பயமுறுத்தல் வார்த்தை. பொதுமக்கள் அல்ல, 'பாரதமாதா' தான் பட்டேலின் ஆட்சியில் பரவசப்படவேண்டும்!

பலன் தரட்டும்

மதுவிலக்குத் திட்டம் பற்றி மாநிலம் முழுவதும் பிரசாரம் செய்ய, தாலுகாவிற்கு இருவர் வீதம் 442 பேரை நியமனம் செய்ய அரசாங்கம் திட்டமிட்டு அதற்கான ஏற்பாடுகள் செய்திருப்பதாகத் தெரிகிறது.

மதுவிலக்கு நம் நாட்டில் நடைமுறையிலிருந்தும் குடித்துவிட்டு ஆடுபவர்கள் செயலும், கள்ளத்தனமாகச் சாராய விற்பனையும் நடந்துகொண்டிருக்கின்றன என்பது பத்திரிகைச் செய்திகளிலிருந்து தெரிகிறது. குடிப்பவர்களைப்பற்றியோ, கள்ளச் சாராயம் கிடைக்குமிடம் பற்றியோ பொதுமக்கள் காட்டிக்கொடுத்தால், போலீசார் காட்டிக் கொடுப்பவர்களுக்குத் தரும் தொல்லையை எண்ணிப் பொதுமக்கள் இதில் முயல்வதில்லை. போலீசாரோ தங்களுக்குத் தகவல் தருபவர்களிடமிருந்துதான் மேற்கொண்ட விவரங்கள் சேகரிக்க வேண்டியிருக்கிறது. இத்தகையதொல்லைகளெல்லாம் ஏற்படாவகையில், இதற்கென்றே சிலரை அரசாங்கம் நியமிக்க முனைந்திருப்பது தக்க திட்டமேயாகும். ஆனால் இந்தப் பிரசாரர்கள் வெறும் மேடைப் பேச்சுடன் நின்றுவிடாமல், ஊர் ஊராகச் சென்று பேசியதாக இல்லாமல், கள்ளச் சாராயம் தயாரிப்பு, விற்பனை முதலியவற்றைக் கண்டுபிடிப்பதில் தீவிரப் பங்கெடுத்து, இத்தீமையைப் பரிகரிக்க வேண்டும். இல்லையெனில், இந்த 442 பேர் நியமித்தும் பலனில்லாமல், இது ஒரு வெட்டிச் செலவுஏற்பாடாகப் போய்முடியும்.

காங்கிரஸ் ஆட்சியின் கவைக்குதவாத் திட்டங்கள்

பொதுமக்கள் பணம் பாழாகிறது; ஏன் என்று கேட்பாரில்லை!

பொது மக்கள் பணத்தைப் பாழாக்கும் இரண்டு செலவினங்கள் சென்னை மாநிலத்தில் கேட்பாரற்று நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

1. பிர்க்கா அபிவிருத்தி இலாக்கா.

2. காதித் திட்டம்.

பிர்க்கா அபிவிருத்தி இலாக்காவின் பெயரால், ஆண்டு தோறும் சென்னை அரசாங்கத்தினரால் ருபாய் 2,32,000 செலவு செய்யப்படுகிறது.

காதித்திட்டத்திற்கென ஆண்டு தோறும் ரூ. 16,55,000 செலவிடப்படுகிறது.

இந்த இரண்டு செலவினங்களாலும் அரசாங்கத்துக்கும் நன்மையில்லை. பொது மக்களும் நன்மை பெற முடியவில்லை.

சென்னை அரசாங்கத்தினரின் பிர்கா அபிவிருத்தி இலாக்கா என்பது கிராமங்களின் பொருளாதார, கல்வி நிலைமைகளை அபிவிருத்தி செய்து கிராமங்களின் நலனில் அக்கரை கொண்டு, மற்றும் பல துறைகளில் கிராமங்களின் உயர்வுக்காகப்பாடுபட்டு, அவற்றை முன்னணிக்குக்கொண்டு வர வேண்டுமென்பதாகும். கொள்கையளவில் இப்படி ஓர் இலாக்கா இருப்பது சரியாக இருக்கலாம். ஆனால், இந்த பிர்க்கா அபிவிருத்தித்திட்டம் எந்த அளவில் நிறைவேற்றப் பட்டிருக்கிறதென்பதும், இதனால் கிராமங்களும் கிராம மக்களும் அடைந்த நலன்கள் யாவை என்பதுமே முக்கியமாகக்கவனிக்கப்பட வேண்டியவைகளாகும்.

கிராமவாசிகளுக்கு இப்படி ஓர் இலாக்கா இருக்கிறதென்பதைப் பற்றியே தெரியாது. இந்த இலாகாவினர் என்ன வேலை செய்கின்றனர் என்பதையும் கிராமவாசிகள் அறிந்திலர்.

தென் கன்னடக் கலெக்டர் பிர்க்கா அபிவிருத்திப் பற்றி அண்மையில் கூறியுள்ளதைக் கவனிப்போம்.

கும்பளா என்ற கிராமத்தைப் பற்றிக் கலெக்டர் குறிப்பிட்டார். அந்தக் கிராமத்தில் பிர்க்கா இலாக்கா வைத்திய உதவி செய்வதாகக் கூறினர். ஆனால் அங்குள்ள ஒரே வைத்திய நிலையம் ஜில்லா போர்டாருடையதாகும். விவசாயிகளுக்கு இயந்திரக் கலப்பைகள் கொடுத்துத் தரிசு நிலங்கள் சிலவற்றை பயிரிடுமாறு செய்திருப்பது விவசாய இலாக்காவாகும். மீன் பிடிக்கும் தொழிலில் வளர்ச்சிகாட்ட முயற்சி எடுத்துக்கொண்டிருப்பது மீன்பிடி இலாக்காவாகும். இதேபோன்று பொலிகாளை இலாக்கா கால்நடை வளர்ச்சி வேலையையும், கூட்டுறவு இயக்கப் பகுதி, கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கும் வேலையையும் கவனித்துக்கொண்டன. பிர்க்கா இலாக்கா செய்திருப்பதெல்லாம், கிராமப் பஞ்சாயத்தார்கள் செய்வது போல, சில வண்டிப் பாதைகளைப் பழுது பார்த்திருப்பது, சில கண்மாய்களை பழுது பார்த்திருப்பது ஆகிய வேலைகள் தாம்.

இதேபோன்று பிர்க்கா இலாக்கா வேலை செய்திருப்பதாகக் கூறப்படும் பிற கிராமங்களிலும் நடைபெற்றிருக்கிறது. சான்றுக்காகவே, தென் கன்னடத்தைச் சேர்ந்த அந்த ஒரு கிராமம் எடுத்துக் காட்டப்பட்டது.

பிர்க்கா இலாக்கா நடத்தும் படிப்பகங்களோ பார்க்கப் பரிதாபமான நிலைமையில் இருக்கின்றன. போதுமான நூல்களே அப் படிப்பகங்களில் இல்லை. இருப்பவையும் ஒழுங்காக வைக்கப்பட்டில்லை. பிர்க்கா படிப்பகங்கள், சிறு அளவு மக்கள் மனத்தைக் கவரக்கூடிய நிலையில் இல்லை.

பிர்க்கா இலாக்கா கல்வித் திட்டமோ கைத்தொழிலையே முக்கியமாகக்கொண்டதாகையால், படிப்புக்கு வழியற்ற இந்தக் கல்விமுறை குழந்தைகளைக் கசக்கிப் பிழிந்து வேலை வாங்குவதாக அமைந்திருக்கிறபடியால் கிராமவாசிகள் இந்தக் கல்வி முறையை விரும்புவதில்லை. அதனால், இந்த முறை வெற்றியுடன் நடைபெற வழியுமில்லை. எனவே, பிர்க்கா இலாக்கா என்பது பொதுப் பணத்தைப் பாழாக்கும் ஓர் இலாக்காவாக இருந்துகொண்டிருக்கிறதே ஒழிய, ஒரு சிறு அளவு நலனும் இதனால் மக்கள் அடைய முடிவதில்லை. அடையவில்லை.

பிர்க்கா அபிவிருத்தி இலாக்காவின் முக்கியமான திட்டம் காதி உற்பத்தியாகும். காதியைப் பெருவாரியாக உற்பத்தி செய்வதிலோ அல்லது காதியை வாங்கி உடுப்பதிலோ கிராம மக்களுக்கு ஆர்வமும் இல்லை. அதை அவர்கள் விரும்பவும் இல்லை. நீண்டு உழைக்க வழியில்லாத அவலட்சணமாயுள்ள, அதிக விலையுள்ள முரட்டுக் கதரை வாங்கி அணியவோ, உற்பத்தி செய்யவோ, பொதுவாகக் கிராம வாசிகளுக்கு விருப்பம் எழவில்லை.

பிர்க்கா அபிவிருத்தி இலாக்காக்களின் பல்வேறு நிலயங்களில் 5 லட்சம் கொடுத்து மேற்பட்ட காதி விற்பனையாகாமல், அப்படியே மூட்டை மூட்டையாக வைக்கப் பட்டுக் கிடக்கின்றது. எனவே, காதித் திட்டமும் அடியோடு தோல்வி அடைந்துவிட்டதென்றே கூறவேண்டும். ஆக, பொதுவாக, பிர்க்கா அபிவிருத்தி இலாக்காவின் வேலைத்திட்டங்கள் அனைத்தும் கிராமங்களுக்கோ, சிறிதும் தேவையில்லாதவைகளாகையால், இந்த இலாக்காவே மொத்தத்தில் சிறிது கூட அவசியமில்லாதது என்பதும், இதன் திட்டங்கள் அனைத்தும் சற்றும் பயனில்லாமல் பெருந்தோல்வி அடைந்து விட்டன வென்பதும் நன்கு புலனாகி விட்டதன்றோ!

இவ்வளவு இருந்தும் சென்னை மாநில முதலமைச்சர், இப்போது ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரே பிர்க்காவில் வேலை செய்வதற்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த இலாக்காவை ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரே பிர்க்காக்களில ஏற்படுத்தி, இலாக்காவை விரிவாக்க வேண்டுமென்று அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளனர். இது அடியோடு தேவையில்லா வேலை. இந்தத்தேவையற்ற வேலைக்காகப் பொதுமக்கள் பணம் செலவு செய்யப்படுவது பெருந்தவறாகும்.

பிர்க்காக்களின் பெயரால் செலவாகும் பணம் பெருந்தொகையல்லவென்று காங்கிரஸ்காரர்களில் சிலர் கூறலாமென்றாலும், நம மாநிலம் இன்றுள்ள நிலையில், இப் பணத்தை அசட்டை செய்து வீணில் இதைச் செலவழிப்பது என்பது நேர்மையுமாகாது நியாயமுமாகாது. இந்த இலாக்காவில் வீணிற் செலவழிக்கப்படும் பணத்தை வேறு கிராம இலாகாகளில் ஈடுபடுத்தலாம. விவசாய இலாக்காவில் ஈடுபடுத்தலாம. இந்தப்பிர்க்கா இலாககாவையே அடியோடொழித்து விடுவதுதான் ஒழுங்கானசெயலாகும், காதியைக்கண்ணை மூடிக்கொண்டு கட்டியழும் கருத்துடையவர்கள், இந்த நல்ல யோசனையை ஏற்றுக்கொள்ள முன்வாரா எனினும, நாட்டின் பொது நலத்தை மனத்திற் கொண்டாவது பொது மக்கள் பணத்தை வீணிற் செலவிடக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டாவது, பிர்க்கா இலாக்காவையும், காதித் திட்டத்தையும், ஆட்சிப் பீடத்தார் அடியோடு ஒழித்துவிட முன்வர வேண்டும்.

— [மெயில் துணைத் தலையங்கம்]

அண்ணா மீது வழக்கு

திருச்சி, நவ. 1—

கி. பி. கோ. 151 (A) பிரிவின் கீழ் தோழர் சி என். அண்ணாதுரையின் மீது தொடுக்கப்பட்ட வழக்கு, நேற்று காலை 11-15 மணிக்கு, திருச்சி சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில். சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் தோழர் பங்கஜ் தொண்டமானால் எடுத்துக்கொள்ளப்பட்டது. தோழர் அண்ணாத்துரை அவர்கள் வழக்கு மன்றத்திற்கு வந்திருந்தார்கள். "ஆரியமாயை" என்ற நூலின் ஆசிரியர் என்ற முறையில் தோழர் சி. என். அண்ணாத்துரை மீது இவ்வழக்குத்தொடுக்கப்பட்டிருக்கிறது. வழக்கில் சம்பந்தப்படுத்தப் பட்டிருக்கும் மற்ற இரு எதிரிகளான நூலைப் பதிப்பித்தவரும், நூலை அச்சியற்றியவரும் சம்மன் வாங்கப் பெற்று வராத காரணத்தால், வழக்கு விசாரணையை 15-11-49-ம் நாளுக்கு ஒத்திப்போட்டிருப்பதாக சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கூறினர்.

வழக்கு விசாரணையைக் கவனிக்க திருச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும், சென்னை, தஞ்சை போன்ற இடங்களிலிருந்தும் சுமார் மூன்றுறுக்கு மேற்பட்ட தோழர்கள் வழக்கு நடைபெறும் மன்றத்திற்கு வந்திருந்தனர். தோழர்கள் என். சங்கரன், டி. எம். பார்த்தசாரதி, என். சாம்பசிவம், காஞ்சீபுரம் புட்டாசாமி, காஞ்சி நகரசபை உறுப்பினர் சி, இராசகோபால், என், விலிங்கம் ஆகியோர் வழக்குக்கான நடவடிக்கைகளைக் கவனிக்க தோழர் அண்ணாத்துரையுடன் வந்திருந்தனர். நீதிமன்றத்திலிருந்தோரிடையேயும் ஒருவித பரபரப்பு காணப்பட்டது.

வழக்கு ஒத்திவைப்புச்செய்தி அறிவிக்கப்பட்டவுடன் தோழர் அண்ணாத்துரை தம்மோடு வந்திருந்த குழுவினருடன் கருணாநிதிப் பார்க் என். எஸ். பங்களாவில் சென்று தங்கினர்கள். (ந-ி)

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

4—11—49

புதுப்பட்டணம் :—	என். வி. நடராசன், என். எஸ். இளங்கோ
காட்டுப்புத்தூர் :—	சி. பி. சிற்றரசு

5—11—49

அறந்தாங்கி :—	ஏ. வி. பி ஆசைத்தம்பி, என். வி. நடராசன், என். எஸ். இளங்கோ.
குமரமங்கலம் (சேலம்) :—	ஜி. என். இராஜு

6—11—49

பொள்ளாச்சி :—	(மாலை 6-மணி) சி. என். அண்ணாத்துரை, பி. பழனிச்சாமி, எஸ். வி. லிங்கம்
ஆனைமலை :—	(இரவு 9-மணி) சி. என். அண்ணாத்துரை, எஸ். வி. லிங்கம்
திருவள்ளூர் :—	இரா. நெடுஞ்செழியன், காஞ்சி. கல்யாணசுந்தரம்
மதுரை :—	என். எஸ். இளங்கோ, எம். அய்யாசாமி, எஸ். முத்து
புரசைபாக்கம்(சென்னை) :—	க. அன்பழகன், கே. ஏ மதியழகன், கே. கோவிந்தசாமி, டி. எஸ், வேலன்
பொன்னிறை :—	ஏ. வி. பி. ஆசைத்தம்பி, டி. கே. சீனிவாசன்

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

சூலூர்

சூலூர், அக். 30—

திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்ற வாலிபர் கழகம் இவை இரண்டின் சார்பாக ஞாயிறன்று, பெரியார் மைதானத்தில் தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் தலைமையில் மாலை 5-30 மணிக்கு துவக்க விழாக்கூட்டம் கொடியேற்றுவிழா நடத்தி வைக்கப்பட்டது.

தோழர் பழனிச்சாமி அவர்கள் புதுக்கழகம் ஏன் ஏற்பட்டது என்னும் பொருள் பற்றி குறுகிய நேரத்தில் மிக விளக்கமாகச் சொற்பெருக்கு நிகழ்த்தினர்கள். அவசர வேலையாக உடனே புறப்பட்டு தன் சொந்த ஊருக்குப் போய்சேர்ந்தார்.

முறைப்படி திராவிட நாட்டுப் பண்பாடலைப்பாடி கொடியேற்றப்பட்டது. தோழர் எஸ்.ஏ. நாச்சிமுத்து யு. கே. ராஜு எஸ், என். அற்புதசாமி ஆகியோர் சொற்பெருக்காற்றினர்கள் கூட்டம் 6-30 மணிக்கு இனிது முடிந்தது. (செ-ர்)

அய்யன்பாளையம்

அய்யன்பாளையம், அக். 30—

23-10-49 தேதி ஞாயிறன்று அய்யம்பாளையம் காந்தி மைதானத்தில், பட்டிவீரன் பட்டித் தோழர் கே. நடராசன் அவர்கள் தலைமையில் துவக்க விழா நடந்தது. தோழர் இரா. சு. தங்கப்பழம அவர்களும் வந்திருந்தார்.

தோழர் இரா. சு. தங்கப்பழம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக நோக்கங்களை அழகாக எடுத்துக் கூறினர். அவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது காலிகள் சிலர் வந்து தோழர் தங்கப்பழம் பேசுவதை மக்கள் கேட்க முடியாதவாறு கூச்சல் போட்டனர். பிறகுத் தாமாக அடங்கி ஒய்ந்துவிட்டனர் பின்னர் கூட்டம் இனிது நடைபெற்றது.

தோழர் தங்கப்பழம் பேசி முடிந்ததும் கொடியேற்றுவிக்கப்பட்டது.

கூட்டம் முடிந்து திரும்பிய வழியில் காலிகள் அன்பர்கள் பலரை அடித்துத் தாக்கினர். அதன் விளைவாக இருவருக்கு மண்டை உடைந்தது. காங்கிரஸ் காலிகளின் இந்தச் செயலைக் கண்டு மக்கள் பெரிதும் வெறுத்து, அவர்கள் மீது அதிருப்தி அடைந்துள்ளனர். (வி-உ)

அறிவிப்பு

டி. எம். வானமாமலை
(நெ. 3, ஆண்டார் தெரு,)
தெப்பக்குளம்.

அவர்கள் திருச்சி நகருக்கு 'மாலை மணி' விற்பனையாளராக 1—11—49 முதல் நியமிக்கப்பட்டிருக்கிறார்

மானேஜர். 'மாலைமணி'

பத்மாஜா ஸ்டோர்ஸ்

ஸ்ரீரங்கத்திற்கு 'மாலை மணி' விற்பனையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மானேஜர், மாலைமணி

கனங்களுக்குக் காணிக்கை!

"இந்தியாவில் தற்போது மத சார்பற்ற சர்க்காரை ஏற்படுத்தி யிருப்பதாகச் சொல்லப்படுவதில் நியாயமே யில்லை. உண்மையாகவே மதச் சார்பற்ற சர்க்காராக இருக்கவேண்டுமே தவிர பெயரளவில் இருக்கக் கூடாது."

—மாஸ்டர் தாரா சிங்.

தோழர் அண்ணாத்துரை

திருச்சி, நவ. 1—

தி. மு. க. பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் 30-11-49-ம் நாள் இரவு தோழர்கள் டி. எம். பார்த்தசாரதி, கி. ராசகோபால், புட்டாசாமி ஆகியவர்களுடன் காஞ்சியை விட்டுப் புறப்பட்டு செங்கற்பட்டு வழியாய் கார் மூலம் திருச்சிக்கு மறுநாள் காலை 6-30 மணிக்குப்போய்ச் சேர்ந்தார்கள். திருச்சியில் கருணாநிதிப் பார்க் என். எஸ். பங்களாவில் தங்கி, தோழர்கள் என். சங்கரன், என். சாம்பசிவம் ஆகியவர்களுடன் வழக்கு சம்பந்தமாய் சிறிது நேரம் உரையாடி விட்டு ஓய்வு பெற்றார்கள்.

காலை 11 மணிக்குத் தோழர்கள் சங்கரன், டி. எம். பார்த்தசாரதி, புட்டாசாமி, கி. ராசகோபால், சாம்பசிவம் ஆகியவர்களுடன் வழக்கு மன்றத்திற்குச் சென்றார்கள். வழக்கு மன்றத்திலிருந்து 11-45 மணிக்கு கருணாநிதி பார்க் வந்து சேர்ந்தார்கள்.

கழக சம்பந்தமாய் பேச வேண்டி நாகைக் கூட்டத்தை முடித்துக்கொண்டு தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத் எஸ். வி. லிங்கம் திருச்சிக்கு வந்திருந்தார்கள். மாலை 2 மணிவரையில் அவர்களோடு அளவளாவிக்கொண்டிருந்தார். பிறகு 2 மணியிலிருந்து, 5 மணிவரையில் மதுரை, துறையூர், தாத்தையங்கார் பேட்டை, லால்குடி, அம்பில், பொன்மலை, தஞ்சை ஆகிய ஊர்களிலிருந்து கழக சம்பந்தமாகப் பேசவேண்டி வந்திருந்த தோழர்களோடு பேசிக்கொண்டிருந்தார். திருச்சி மாவட்ட தி. மு. கழக மாநாட்டைத் திருச்சியில் டிசம்பர் திங்கள் இறுதி வாரத்தில் நடத்துவது பற்றி மாவட்டத் தோழர்களோடு கலந்து பேசினர். திருச்சி மாவட்டத்தில் ஜனவரி திங்களில் சுற்றுப்பிரயாணம் செய்வதாக, பல ஊர்களுக்கும் அழைத்தத் தோழர்களுக்கு வாக்களித்தார்கள்.

இன்று புதுவையில் நடைபெறும் ஆண்டுவிழாவில்கலந்து கொள்ள தம்முடன் வந்த குழுவினரோடு சென்றுள்ளார்கள். தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களும் உடன் சென்றுள்ளார். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், டி. எம். பார்த்தசாரதி ஆகிய இருவரும் நேற்று இரவு சென்னைக்குப் புறப்பட்டு விட்டார்கள். (ந-நி)

இந்த 'சுயராஜ்யத்தில்' இனிப்பு இல்லை!

ஆளவந்த காங்கிரஸ் அரசிடம் கைத்தறியாளர் கவலைதீரவகை இல்லை!

ஜலகண்டபுரத்தில் சாமி--கண்ணன்--கருணாநிதி

ஜலகண்டபுரம், அக். 31—

30-10-49 மாலை 6-30 மணிக்கு ஜலகண்டபுரம் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா தூத்துக்குடி தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் தலைமையில் உற்சாகத்தோடு ஆரம்பமாயிற்று. தோழர் நடிகர் சிவசூரியன் அவர்கள் நாட்டுப் பாடல்கள் பாடி கூட்டத்தினரை மகிழ்வித்தார். மேட்டூர், குளத்தூர், எடப்பாடி, சேலம் முதலிய பல ஊர்களிலுமிருந்தும் கழகத்தோழர்கள் வந்திருந்தனர்.

கே. வி. கே. சாமி

தலைவர் முன்னுரையாகப் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கம் பற்றிக் கூறிவிட்டு, தொழிலாளர்கள் இன்றைய ஆட்சியில் படும் அல்லல்களையும், தொழிலாளர் ஸ்தாபனங்களை அடக்க ஆட்சியாளர் கடைப்பிடிக்கும் கடுமையான நடவடிக்கைகளையும் விரிவாக எடுத்துரைத்தார். பாடுபட்டு-ரத்தம் சிந்தி உழைத்த உழைப்பெல்லாம் முதலாளிகளுக்கு இனியும் பலன் தந்து கொண்டிருக்கும் நிலையை திராவிட முன்னேற்றக் கழகம் பார்த்துக்கொண்டிருக்காது. சமுதாய வேலைகளோடு, அரசியல், பொருளாதார விடுதலையடையும் பணியையும் மேற்கொள்ளும் அவசியம் வந்துள்ள நேரமிது என்றும் விளக்கினர்.

ப. கண்ணன்

தோழர். ப. கண்ணன் அவர் தமது சொற்பொழிவில். "கைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களைப் போக்க அரசாங்கம் முனைவருவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. குறிப்பாக ஜலகண்டபுரம் கைத்தறித் தோழர்கள் வந்தேமாதரம் போட்டவர்கள். அவர்கள் அதன் பயனை இப்போது அனுபவிக்கிறார்கள் — கைத்தறியாளர் துயர் தீர்க்க திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடும்" எனக் குறிப்பிட்டார்.

மு. கருணாநிதி

கடைசியாகத் தோழர் மு. கருணாநிதி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்ற வேண்டிய அவசியத்தைவிளக்கிப் பேசியதாவது 'கொள்கை மீதுள்ள தணியாத காதல்தான பெரியாரின் தலைமையிலிருந்து எங்களை விலகச்செய்தது. அவர் எங்கள்மீது வசைமாரிபாடுவதையே அலுவலாகக் கொண்டிருப்பது மன்றி ஆத்திரத்தில் அவரின் ஆதரவாளர் எங்கள்மீது வீசுகிற சுடு சொற்களையும் அனுமதித்துவருகிறார். இது அவரின் நிலைமைக்கு ஏற்றது அல்ல. நாங்கள் இளைஞர்கள், அவரோ முதியவர். நாங்கள் குறைந்த அனுபவம் உள்ள உண்மை உழைப்பாளிகள். அவரோ அனுபவம் பல பயின்றவர். ஆனால் அவர் எங்களிடம் பொறுமையைக் கற்றுக்கொள்ள வேண்டிய அளவுக்கு வந்து விட்டாரே என்பதை எண்ணும்போது, நெஞ்சு வெடித்து விடும் போலிருக்கிறது. நாங்கள் அவரைச் சாக்ரடீஸ் என்றோம் அவர் எங்களைச் சதிகாரர்கள் என்கிறார்! நாங்கள் அவரை மார்க்ஸ் என்றோம். அவர் எங்களை மைனர்கள்என்கிறார்! நாங்கள் அவரை கல்வியோ என்றோம்! அவர் எங்களைக் காலிகள் என்கிறார்! நாங்கள் அவரை அப்ரகாம லிங்கன்என்றோம் அவர்எங்களை ஆட்டுமந்தைகள் என்கிறார்! அவர்என்ன தான் சொன்ன போதிலும் நாங்கள் கோபப்படப்போவதில்லை. எங்களுக்குத் தெரியும் இரண்டு ஆடுகள் முட்டிக் கொண்டால் ரத்தங்குடிக்க நரி, நாக்கை நீட்டிக்கொண்டிருக்கும் என்பது! திராவிடர் கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம் இங்கு எரிகிற இரண்டு விளக்குகளைப்போன்றவை. விளக்குகளின் தன்மையைப் பொறுத்து வெளிச்சம் வருகிறது. ஆனால் இரண்டின் பார்வை ஒரு திசையை நோக்கித்தான்! வெளிச்சம் ஒன்றன் மீது ஒன்று பாய வேண்டிய அவசியமில்லை! இதை எதிரிகளும், பெரியார் ஆதரவாளரும் உணரவேண்டுகிறேன்.

புதுக்கொடி

பெயரிலே முன்னேறியிருக்கிற நாம்கொடியையும் மாற்றியுள்ளோம். இழிவு, இருநிறத்திலே நம்கலாச்சாரத்தை முற்றுகை போட்டிருந்தது. புரட்சி எண்ணம்—(சிவப்பு நிறம்) கறுப்பாகுள்-இழிவுகளுள் சிக்கியிருந்தது. ஆனால் இப்போது அந்த எண்ணம், இழிவின் முற்றுகையை மறிய அடித்து, நேராகநின்று சிகப்பு ஒரு பக்கம், கறுப்பு ஒரு பக்கமாக இழிவோடு போராட ஆரம்பித்துள்ளது வெற்றி எங்கப் பக்கம் என்று நிர்ணயிக்கிற இறுதிப் போரிலே இறங்கப் போகிறோம் நாம்!

ஆரியம்-திராவிடம்

திராவிடராவது? ஆரியராவது? என்று நாமக்கல்லார்கள் பாடிடும் நாளில்தான், பாரிஸ்நகரிலே சர். ராதாகிருஷ்ணன் ஆரியம் வேறு-திராவிடம் வேறு என்று பேசியிருக்கிறார். இதனுக்கு இரண்டு விளக்குகள் என்று பாடுபவர் நாமக்கல்லார். அதே நிலையில் தான் திராவிடரும் ஆரியரும் ஓரே இனம் என்று கூறுகிறார். யாரும் மறுக்கமுடியாத அளவுக்குத் திராவிடம் என்றோர் இனமுண்டு என்பது தெளிவுபடுத்தப்பட்டுவிட்டது. அந்தத்திராவிட இனத்தின் விடுதலைக்காகத்தான் எல்லாத் துறையிலும் பணியாற்றக் கிளம்புகிறது முன்னேற்றக் கழகம். வடவர் ஆதிக்கத்தால் திராவிடம் எவ்வளவு தாழ்ந்து விட்டது என்பதும், பொருள் வளம் எங்கு மிகுந்துள்ளது என்பதும் தேசியத் தோழர்கட்குத் தெரியாமற் போனது ஏனோ?

வடவர் ஆதிக்கம்

ஆறு கோடி ரூபாய் உணவு அபிவிருத்திக்காக மத்ய சர்க்காரைக் கடன் கேட்டது சென்னை சர்க்கார். மத்ய சர்க்காரோ கை விரித்துவிட்டது. மத்ய சர்க்காரிடம் மண்டியிடும் போக்கு இனியாவது மாற வேண்டாமா? தேசியத் தலைவர்களுக்குப் பேர் பெற்ற இடம் வடநாடு. வடநாட்டுப் பகவத்கீதைக்கு உள்ள மதிப்பு, தென்னாட்டில் குறளுக்குக் கிடையாது. டாலர்களிலும், மோதிரங்களிலும் வட நாட்டுச் சாயிபாபா சுகிராடுகிறாரே தவிர தென்னாட்டு ராமலிங்கர் அல்ல! திருப்பூர் குமரனோ, தீரர் சிதம்பரனாரோ, தில்லையாடி வள்ளியம்மாளோ, வெள்ளையனை எதிர்த்த கட்டபொம்மனோ வட நாட்டில் சிறப்பிக்கப் படுவதில்லை ஏன், இங்குக் கூடத்தான் இல்லை! ஆனால் வடநாட்டுச் சரோஜினியும், நேருவும், சாதாரணக் கதர்க் குல்லாயும் இங்குப் போற்றிப் புகழப்படுகிறார்கள். இந்த ஆண்டு சுதேசமித்திரன் ஆகஸ்ட் சுதந்திர மலரைப் பார்த்தால் தெரியும்—பதினேழு தியாகிகளின்படம், அதில் பதினைந்து பேர் வடநாட்டுக்காரர். இருவர் தமிழ் நாட்டவர். தமிழநாட்டவரில் ஒருவர் ராஜகோபாலாச்சாரியார், மற்றொருவர் சேலம் விஜயராகவாச்சாரியார். வெட்கப்பட வேண்டாமா தேசியப் புலிகளே! என்று திராவிடத் தோழர்களை வேதனையோடு கேட்கிறேன்.

தமிழ் அழிவதா?

இதையெல்லாம விட இன்னும விபரீதமாக நமமுடைய ரத்தத்தைச் சுண்ட வைக்கும் தன்மையில், தமிழை அழிக்கத் திட்டம் தீட்டுகிறார்கள். புகைவண்டி நிலையங்களிலே தமிழ் அவமானச் சின்னமாக ஆக்கப்பட்டுவிட்டது. சேலம் என்று குறிப்பிடும் பலகையில் முதலில் இந்தி எழுத்து! பிறகு ஆங்கில எழுத்து!! மூன்றாவது தமிழ் எழுத்து!!! தமிழா! உன் "தலை எழுத்து" எப்படி ஆகிவிட்டது பார்! இதை நீ பார்க்கும்போது பதற வேண்டாமா? மாநாடுகளில் கலந்து கொண்டு மாலை மரியாதை பெற ஊர் சுற்றும் தமிழக— திராவிட மந்திரிமார்களே! உங்கள் கண்களிலே இந்த மானம் அழித்திடும் செயல் படவில்லையா? குமாரசாமியார் மனம் கொதிப்படைய வேண்டாமா இது கண்டு! இந்தி எதிர்ப்புப் போர் எவ்வளவு அவசரமாக-அவசியமாகத் தேவை என்பதை திராவிட மக்களே! சிந்தித்துப் பாருங்கள்.

ஆட்சி முறையா இது!

ஆடுவோமே பள்ளு பாடுவோமே என்று ஆனந்த சுதந்திரம் வந்த பிறகு நாம் அனுபவிப்பது எல்லாம் அடக்கு முறைகளைத்தவிர வேறென்ன? சுயராஜ்யத்திலே அரிசி கிடையாது! சுயராஜ்யத்திலே இனிப்பு கிடையாது! ஆம் சர்க்கரை கிடையாது. வேறு நாடுகளிலே சர்க்கரை மணங்கு 11 ரூபாய்! ஆனால் ஆத்மார்த்திகமான இந்த மக்கள் சர்க்காரிலே மணங்கு 35 ரூபாய்! சுயராஜ்யம் மூன்று பங்கு அதிகமாக இருக்கிறது எல்லாவற்றிலும்! ஆம்—மந்திரிகள் சம்பளம மூன்று பங்கு அதிகம், 1940ல் ராணுவச் செலவு 50 கோடி என்றால இப்போது 150 கோடி செலவு. ஆங்கிலேய ராட்சியில் சிவில் நிர்வாகச் செலவு. 12 கோடி என்றால் இப்போது 40 கோடி செலவு, இப்படி செலவுகளையெல்லாம் மூன்று பங்காக ஆக்கி மஞ்சள் பெட்டியில் வோட்டுப் போட்டவர்களின் நெற்றியில் எல்லாம் "மூன்று கோடுகளை"ப் போட்டு விட்டார்கள். மூன்று வர்ணக் கொடிக்காரரின் மகத்துவம் இது! இந்த ஆட்சி முறை மாற வேண்டாமா? ஏழைகள் வாழ வேண்டாமா?

மருந்து இதோ!

இதற்கெல்லாம் ஒரே மருந்து திராவிட முன்னேற்றக் கழகந்தான்! திராவிடப் பிரிவினையும், சமுதாய விடுதலையும் சிகிச்சை முறைகள் ஆனால்தான் ஏழைகளின் ஏக்கம் தொலையும்—இன்பம் மலரும்" என்பதாக நீண்ட நேரம் விரிவுரையாற்றினர்.

நன்றி கூறலுடன் கூட்டம் இரவு 9 மணிக்கு முடிவுற்றது. இரவு வெளியூர்த் தோழர்கட்கு தோழர் ப. கண்ணன் அவர்கள் இல்லத்தில் விருந்து நடைபெற்றது. கூட்டம் சிறப்பாக நடைபெற கழகத் தோழர்கள் பெரிதும் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம்

28-10-49-ல் தேவனாம்பட்டணத்தில் திரு பாலுவுக்கும், சுலோசனாவுக்கும் புதுவாழ்வு ஆசிரியர் ஈ. வி. கி. சம்பத் தலைமையில் நடைபெற்றது. திருமணத்தை ஒட்டி இரெ. இளம்வழுதி, என். சிவரத்தினம், தில்லை வில்லாளன் முதலியோர் பேசினர்.

மாலை 5-30 மணிக்குக் கூடலூர் பழைய பட்டிணம் திராவிட முன்னேற்றக்கழகச் சார்பில் மஞ்சகுப்பம் மைதானத்தில் கூடலூர் ஒ. டி. பஞ்சாயத்து கோர்ட் தலைவர் வி. டி. தண்டபாணி அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் நடந்தது.

அவ்வமயம் தில்லை வில்லாளன், இரெ. இளம்வழுதி, ஈ. வே. கி. சம்பத் முதலியோர் பேசினார்கள். செயலாளர் இளங்கோ நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

முனிசிபல் உத்தரவு கிடைத்தும் கூட்டத்திற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. தடையை நீக்க உத்தரவு வாங்க முயற்சி எடுத்துக்கொண்ட தோழர் ஜே.பி. நயினார், வி. டி. தண்டபாணி, சுப்பிரமணி ஆகியோரின் தொண்டு பாராட்டுதற்குரியது.

'கொள்கைப்பெரியார்' இதயத்திலிருந்து அகலவில்லை!

சியாங்பாதையில் நேருவா?- -அழிவு அண்ட வருமே!

மயிலை துவக்க விழாவில் தோழர்கள் முழக்கம்

சென்னை, அக். 22—

நேற்று மாலை 6-மணிக்குச சென்னை மயிலாப்பூர் முண்டகண்ணியம்மன் கோயில அருகிலுள்ள மைதானத்தில், தி. மு. க மயிலைக் கிளையின் துவக்க விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் சென்னை நகர முழுவதினின்றும் ஏராளமான இயக்கத் தோழர்களும். பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் குழுமியிருந்தனர். தோழர் நாகப்பன் அனைவரையும் வரவேற்று முன்மொழிய, தோழர் விபீஷணன் வழிமொழிய கூட்டத்திற்குத் தோழர் பொன். கு கோதண்டபாணி தலைமை தாங்கினார். தோழர் ஜெயராமன் திராவிடப் பண்பாட கூட்டம் துவங்கிற்று.

பொன். கு. கோதண்டபாணி

தலைவர் தமது முன்னுரையில் தி மு. கழகம் ஒரு போட்டிக் கழகம அல்லவென்றும், இதனைத் துவக்கியதற்குக் காரணம் இயக்கத்தின் பெரும் பகுதியினர் ஜனநாயக முறையில் நம்பிக்கையும், பொருந்தா மணத்தினலும், அதற்குக கூறப்படும தத்துவார்த்தங்களிலும் அவநமபிகக்கையும கொண்டிருப்பதாலுமதான் என்றும் விளக்கிய பிறகு, நாடாள்வோர் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற எதிர் கட்சிகளைத் தடை செய்வது 'ஜார்' முறையென்றும், 'மாஸ்கோ'வைக் காட்டி பயமுறுத்தி 'பெர்லின' பக்கம் போய்க்கொண்டிருப்பதை மக்கள் உணர்ந்துவிட்டார்களென்றும கூறித் தமது முன்னுரையை முடித்தார்.

மா இளஞ்செழியன்

முதற்கண் தோழர் மா. இளஞ்செழியன் (ஆசிரியர் "போர்வாள்") பேசுகையில் பெரியாரின் பொருந்தா மணத்தையும் அதனைத்தடுப்பதற்குக் கழகத்தவர் கையாண்ட ஜனநாயக முறைகளையும் வேணடுதலையும் அதற்குப் பெரியார் காட்டிய மதி பற்ற தன்மையையும் விளக்கி நீண்டதொரு சொற்பொழிவாற்றினர்.

கே. ஏ. மதியழகன்

அடுத்துப் பேசிய தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் தேசிய சர்க்காரின் அடக்கு முறைகளையும், புத்தகப் பறிமுதல்களையும, நாடகத் தடைகளையும் மிகமிக வன்மையாகக் கண்டித்ததுடன் தோழர் நேரு. சீனசோமினடாங் தலைவ சியாங்-காய்-ஷேக்கையாண்ட முறைகளால் கண்ட முடிவுகளைப் பாடமாகப் பெற வேண்டுமென்றும், சீனவின் புரட்சித் தலைவன் மா-சே-துங் கண்டுள்ள புதிய சீனவின் மூலம் இநதிய சர்க்கார புத்தறிவு பெற்று புதுப் பாதை—சமதர்மப் பாதை நாடினாலன்றி, சுழன்றடிக்கும முற்போக்குச் சூராவளியினின்று தப்பமுடியாதென றும் குறிப்பிட்டார்.

கே. வி. கே. சாமி

அதற்கடுத்துப் பேசிய தூததுக்குடித் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் சு. மி போன்ற காங்கிரஸ் பார்ப்பன பத்திரிகைகளில் தேசத்திற்காக உழைத்து உருககுலைந்து உயிர்நீத்த வீரர் வ. உ. சிதமபரம், திருப்பூர் குமரன் போன்ற தியாகிகளை இருட்டடிப்பு செய்துவிட்டு, இராஜாஜி விஜயராகவாச்சாரி போன்ற பார்ப்பனர்களைமட்டும் தியாகிகளாகக் காட்டி வருவது தேசியக் கொலையென்றும், அதனைக கண்டும் விழிப்புணர்ச்சி பெருத காங்கிரஸ் திராவிடர்களைக் கண்டு மிக மிக வெட்கபபடுவதாகவும், தேசியத் தோழர்கள் தமது கட்சியில் நல்ல திட்டங்களகள் இல்லையாயினும் தன் மானத்துடன் வாழவாவது வழிசெய்துகொள்ள வேண்டுமெனறும கூறி உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றினர். இவரது பேச்சால் அநேக தேசியததோழர்கள் விழிப்புணர்ச்சி பெற்ருர்கள் என்ருல் மிகையாகாது.

இரா. நெடுஞ்செழியன்

கடைசியாகத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதாவது :—தி. மு க. ஒரு போட்டிக் கழகமல்ல. யாரேனும் அப்படிக கருதியிருந்தால் நிச்சயம் ஏமாற்றமடைவர். அண்ணு கூறியுள்ளதைப்போல் இரு கழகங்களும் இரட்டைக் குழல் துப்பாக்கியேயாகும. இரு கழகங்கள் ஒன்றை ஒன்று தாக்கித் தகர்த்துக்கொள்ள நாங்களென்ன அரசியல் யூகமற்றவர்களா? இன்று பெரியாரை ஏன் தலைவராக ஏற்றுக்கொள்ள மறுக்கிருேமென்ருல், அதற்குக் காரணம் கழகக் கொள்கையில் உள்ள வேறுபாடல்ல; ஜனநாயகமுறைககு அவா தந்த அவமதிப்பும், அவா கொள்கைக்கு இழைதத துரோகத்தின விளைவுந்தான். பெரியார் எமது இதயத்தினின்றும் அகலவில்லை பொருந்தாமணம் செய்துகொண்ட பெரியார் அலல; தீண்டாமையை ஒழித்த வைக்கம் வீரர் பெரியார! மதத்தை முறியடித்த பெரியார்! முதலாளித்துவத்தை சாடிய பெரியார்! எங்களுக்கு அன்றும் இன்றும் என்றும் தலைவர் தான்! எங்கள் உள்ளத்தில் அவருக்கு மட்டும்தான் இடமஉண்டே தவிர. மணியம்மைக்கு அல்ல.

அதற்குரிய தகுதி மணியம்மைக்கு இல்லை! எனவே அவர் விருப்பப்படி அவர் காலத்திலோ அவருக்குப் பிறகோ அந்த அம்மையை வாரிசாக ஏற்கவோ, தலைவியாக ஏற்கவோ நாங்கள் விரும்பவில்லை! ஏற்க விரும்புவோர் திராவிடர் கழகததிலேயே இருக்கட்டும்! நாம தடுக்கவில்லை! நமக்குள் மோதுதலின்றி நமது கொள்கைக்காகப் போராடினுல் பாதகம நமக்கல்ல சர்க்காருக்குத்தான். —உரலுக்கு ஒரு பக்கம் இடியென்ருல், மத்தளத்திறகு இரு பக்கமும் இடி யென் பதைப் போல.

தோழர்களே, நமக்குள் மேலும பிளவும் பேதமும புக இடமில்லை, நமககுள்ள பொறுப்பும் பணியும் ஏராளமானதால். நாம சமூகம, பொருளாதாரம், அரசியல் ஆகிய மூன்று துறைகளிலும் முனைந்து பணிபுரிய வேண்டியவர்கள். இந்நாட்டின் அரசியலார் அர்த்தமற்ற அநாகரீக போக்கிலே பணியாற்றி வருகிருர்கள். இந்த உபகண்டததின ஆலை அரசர்கள்—முதலாளிகள் சுமார் 300 கோடி ரூபாய்க்கு மேலாகவே பதுககி வைத்திருப்பதாகவும், அதறகு இன்று வரை ஒரு செலலாக் காசும வரிப்பணமாகச் செலுத்தப்படவில்லை யென்றும் பண்டித நேருவும். ஜான் மத்தாயும் கதறுகிருர்கள்! பதுங்கியுள்ள பணத்தைக கண்டுபிடிக்க முடியவில்லையாம் அவர்களால்! அத்தகைய கள்ள மார்க்கட்டில் கொள்ளையடித்த பணம் 300 கோடிக்கு மேல் இருககுமென்று மாத்திரம் தெரியுமாம்! அதற்கு வரி செலுத்தினுல் மட்டும போதுமாம்! செய்த குறறத்திற்குத் தண்டனையில்லையாம்! வாக்குறுதி அளிக்கத் தயாராம்! எப்படி இருக்கிறது? கள்ளமார்க்கட் கழுகுகளைக கடைத்தெருவில்நிற்கவைத்து தூக்கிலிடப் போவதாக ஜம்பம் பேசி பீடம ஏறிய 'ஆசியாவின் ஜோதியாம்' பண்டிதரின் பேச்சு!

பாட்டாளிக்காகப் பரிந்து பேசி, பசியால துடிக்கும் பாமர மககளுக்குப் பக்கதுணை நின்ற தொழிற் சங்கவாதிகளையும் கம்யூனிஸடுகளையும் பதுங்குமிடம தேடிகண்டு பிடிக்கும் அளவுககுத் துப்பறியும தோழர்களை ஆட்சிக்குத் துணையாகப் பெற்றுள்ள காந்தியவீரர் நேரு அரசாங்கம், 300 கோடி ரூபாய் பதுங்கியுள்ள இடததைக கண்டு பிடிகக முடியவில்லை யென்று கூறுவது பித்தலாட்டம—மககளை ஏமாற்றுவதாகும். மனது வைத்தால் முடியாத காரியமா அது? அத்தகைய திறமையுடன் துப்பறியும் தோழர்கள் சர்க்காரில் இல்லையானுலும் பாதகமில்லை, நாட்டில்—எதிர்க்கட்சியில் ஏராளமாக உள்ளனர்."

மேலும் அவர் ஆட்சியாளரின் அடக்கு முறையை, அர்த்தமற்ற தீபாவளிப் பண்டிகையைக்கொண்டாடும் மூடத்தனத்தையும் வன்மையாகக் கண்டித்து சுமார் 1-30 மணி நேரம் சொற்பொழிவாற்றினுர்.

தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் ச. இராதாகிருஷ்ணன் நன்றி கூறக் கூட்டம இனிது கலைந்தது. இந்தத் துவககவிழா சிறப்புற நடநததற்குக்காரணமாயிருநதமயிலை தோழர்கள் பாராட்டுதற்குரியோர் ஆவர். (வி—உ)

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைகள்

ஆனைமலை—மாணவர் கிளை

ஆனைமலை, அக். 26—

24—10—49 அன்று தோழர் ஆ. ச. மு. உசேன் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் "திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்—ஆனைமலைக் கிளை" அமைக்கப் பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—ஆ. வ. அசவர்; துணைச் செயலாளர்—ஆ. மு. சா. அமீது; பொருள் உறுப்பினர்—ஆ. ரா. சத்திய நாராயணன்; விளம்பர உறுப்பினர்—ஆ. ரா. வெற்றி வீரன்; ஏனைய செயற்குழுவினர்:—கி. அ. வாணன், எ. வி. அபுசாலி, ர. சின்னுச்சாமிராசு, ஆ. கு. நாகராசு, ஆ. ம. கோபாலன். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டு, நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

• • •

பல்லடம்—மாணவர் கிளை

பல்லடம, அக். 26—

24—10—49ல் தோழர் ஆர். சிங்காரவேலு அவர்கள் தலைமையில் நடைபெற்றக்கூட்டத்தில், 'திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்-பல்லடம கிளை' திறவப்பட்டுக்கீழ்க்கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் :—சி. ஆர். சிதம்பரம்; துணைச்செயலாளர்:-கே. பழனிசசாமி; பொருள் உறுப்பினர்:—பி. சுப்பிரமணியம்; விளமபர உறுப்பினர்:—கே.ஜி. இலட்சுமணசாமி. ஏனைய செயலுறுப்பினர்:—என் பி. சுப்பிரமணியம, எம. தங்கப்பன், கே. டி. இராமசாமி, பி.கே. பெரியசாமு, சி.ஆர்.சிதம்பரம், கே. பழனிச்சாமி, பி. சுப்பிரமணியம், கே. ஜி. இலட்சுமணன், பி. எஸ். நசீர் அகமது. பின்பு தி மா.மு. கழக இலட்சியம் குறித்துத்தோழர் பி. நல்லசாமி பேசினுர். பிறகு நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

* * *

தஞ்சை—மாணவர் கிளை

தஞ்சை, அக். 27—

தஞ்சை தி. மா. மு. கழக அமைப்புக் கூட்டம், 26—10—49 அன்று அண்ணுமலைப் பல்கலைக் கழக மாணவர், தோழர் எம். கோவிந்தராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது "திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்—தஞ்சைக் கிளை" திறவப்பட்டுப், பின் வரும் புதிய செயறகுழு வொன்று அமைக்கப் பட்டது.

செயலாளர் :—டி. வி. கனகராசன்; துணைசெயலாளர் :—ஆர். செல்வச்குமரவேல்; பொருள் உறுப்பினர் :—எம். கோவிந்தராசன்; விளம்பர உறுப்பினர் :—கே. பாலசுப்பிரமணியன்; ஏனைய செயற்குழுவினர் :—எஸ். முருகையன், எஸ். சரவணபவான், எஸ். கருணுநிதி, எஸ். சுந்தரராசன், டி. எஸ். மகாலிங்கம், எ. ஜி. தேவதாஸ், ஜி. மாணிக்கவாசகம், பிச்சைப்பிள்ளை. மேலும் செயலுறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள செயலாளருக்கு உரிமை வழங்கப் பட்டது. பின்பு செயலாளர் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

பெரியகுளம்—மாணவர் கிளை

பெரியகுளம, அக். 27—

25—10—49-ல் தோழர் வெற்றிச் செல்வன் அவர்கள் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் இவ்வூர் தி. மா. கழகம் 'திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்—பெரியகுளம் கிளை" என மாறறப் பட்டது. பின்பு புதிய செயறகுழு வொன்று அமைக்கப்பட்டது.

செயலாளர்—சு. நடராசன்; துணைச் செயலாளர்—கோ. வி சங்கா; நிதி உறுப்பினர்—வெற்றிச் செல்வன்; விளம்பர உறுப்பினர்கள்—ப. கருப்பையா, யா. மதார்க்கான். ஏனைய செயற்குழு உறுப்பினர்—பெ. இருளப்பன், பொன்ராசு, பரமன், இராஸையா, பக்கர், சேதுராமன், ஹைதர், பாண்டியன். (செ-ர்)

* * *

கோவை பூளைமேடு-மாணவர் கிளை

கோவை. அக். 27—

பூளைமேடு பூ. சா. கோ. கலைக் கல்லூரி, பூ. சா. கோ. தொழிற் பள்ளி, பண்மக்கள் உயர்நிலைப்பள்ளி ஆகிய வற்றின் மாணவர்கள் 26-10-49ல் பூளைமேடு, சுண்ணம் உணவு விடுதியில் கூடி, கோவை நகர திராவிட மாணவர் முன்னேற்றக்கழகத்திற்கு உட கிளையாக "திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்—பூளைமேடுக்கிளை", அமைத்தனர். பின்பு புதிய செயற்குழு வொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் :—அப்பாதுரை; துணைசெயலாளர் :—மெர. இ. மூர்த்தி; நிதி உறுப்பினர் :—வெற்றிவேல்; விளம்பர உறுப்பினர் :—பு. பா. ஜெயபால். ஏனைய செயற்குழுவினர்:-இராஜகோபால், வெங்கிடபதி, பாண்டியன் (தொழிற் பள்ளி மாணவர்கள்) சண்முகசுந்தரம், சிவகாதன், வெள்ளியங்கிரி (ப. உயர்நிலைப் பள்ளி மாணவர்கள்) பெரியசாமி, கருப்பண்ணசாமி, சின்னசாமி, மாணிக்கம், அய்யாசாமி. (பூ. சா. கோ. கலைக் கல்லூரி மாணவர்கள்) பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

திராவிடன்

வார இதழ்: — 0—1—0
ஆசிரியர் : என். வி. நடராசன்.

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் உடனே தேவை.

காஞ்சீபுரம்
திண்டிவனம்
பண்ணுருண்டி
போளூர் (வ. ஆ.)
ராசீபுரம்
தர்மபுரி
திருவாரூர்
கரூர்
லால்குடி
புதுக்கோட்டை
திண்டுக்கல்
கோயில்பட்டி

—: விவரங்களுக்கு :—
மானேஜர் : "திராவிடன்"
18, பெருமாள் முதலி தெரு,
சென்னை-1.

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.